

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


வைகாசி - ஆனி

ஜூன் - 2019

மலர் 8 இதழ் 6


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| Vedantic Prayer | 9 |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 12 |
| இராமாவதாரம் எதற்காக | 14 |
| தமிழ் பாகவதம் | 16 |
| 126 -வது ஜயந்தி கொண்டாட்டம் | 18 |
| கும்பாபிஷேகப் பத்திரிக்கை | 19, 20 |
| ஸ்ரீ க்ருஷ்ண நமஸ்காரம் | 21 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 14 | 25 |
| புராணக்கதை | 26 |
| வேதாந்த ஸாரம் | 29 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 31 |
| ஸபா ரஞ்ஜன சதகம் | 32 |
| ருத்ர கீதை | 33 |
| த்ரிபுரஸுந்தரீ பாதத்ஸ்தவம் | 35 |
| பித்ரார்ஜிதம் | 36 |
| மகாபாரத சுருக்கம் | 38 |
| ஸனாதன தர்மம் - ப்ராமண நூல்கள் | 40 |
| திருமந்திரமும் அத்வைதமும் | 42 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்


ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

டாக்டர் G. சங்கரநாராயணன்








# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் ம.வே.பசுபதி

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்

ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்

நெ.1.சாலைத்தெரு,

காஞ்சீபுரம் - 631502.

தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :

kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## ஸ்வராஜ்யத்தில் ஸுராஜ்யம்

நானாதிக்குகளிலும் தேர்தல் கோஷம் அடங்கி ஒரு வழியாக புதிய மந்த்ரிசபை வந்தாயிற்று. அரசனில்லாது போனால் என்ன நடக்கும் என்று ராமாயணம் கூறும். மனிதர்கள் தம் இஷ்டம்போல் நடந்து கொள்வர், கள்வர்கள் எதையும் செய்யத்துணிவர். பரஸ்பர நம்பிக்கை இருக்காது, நெறி முறை தவறி எல்லாம் நடக்கும்.

இப்படி அடுக்கிகொண்டே போகும். எனவே அரசனுக்காக மக்கள் தேர்ந்தெடுக்கும் முறை வந்தது. அதிலும் நம்முடைய தேர்தல் நடத்தும் முறையை உலகமே வியந்து பார்க்கிறது. ஸ்ரீவல்லபாய் படேலின் முயற்சியினால் குடியரசான நம் நாடு பல மக்களால் பல ப்ரதம மந்த்ரிகளை தேர்ந்தெடுத்துள்ளது. ப்ரதம மந்த்ரியை அரசனென்றே வைத்துப் பேசுவோம். குடிகளைக் காத்தல் என்பது அவனுடைய கடமை.

''யதா ப்ரஹ்லாதனாத் சந்த்ர:ப்ரதபாத் தபனோ யதா
ததைவ ஸோஅபூன்வர்தே ராஜா ப்ரக்ருதி ரஞ்சனாத்'' ।।

ரகுவம்சம் களிப்பூட்டுவதால் சந்த்ரன், காய்வதால் ஸூர்யன் எப்படி பொருளுக்கு ஒத்தபெயருடையவனோ அவ்வாறே அந்த அரசன் மக்களை மகிழ்விப்பதன் காரணத்தால் பொருளுக்கு ஒத்த பெயரை உடையவனாக இருந்தான்.

ராஜா என்றால் ப்ரக்ருதி ரஞ்சனம் என்று இலக்கணமே வகுக்கிறார் காளிதாஸர். மகிழ்வித்தல் என்றால் சாமான்ய விஷயமில்லை. அவரே கூறுகிறார்.

''ப்ரஜானாம் வினயதானாத் ரக்ஷணாத் பரணாதபி
ஸ பிதா பிதரஸ்தாஸாம் கேவலம் ஜன்மஹேதவ'' ।।

திலீபன் ராஜா ப்ரஜைகளுக்கு பண்பைக் கொடுக்கும் கல்வி, காப்பாற்றுதல், தாங்குதல் இவைகளைச் செய்ததனால் அவனே அவர்களுக்குப் பிதாவானான். தந்தையர்கள் பிறப்பிற்குக் காரணமாக மாத்ரம் இருந்தனர்.

தெய்வப்புலவர் வள்ளுவரும் அரசனைப் பற்றியும் ஆட்சியைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறார்.

''கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்
உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி''.

தாராளமான குணம், ஜீவகாருண்யம், நீதி தவறாமை, பாதுகாப்பளித்தல் இவை நான்கும் உள்ள அரசன் கலங்கரை விளக்கம்போல் இருப்பான்.

இப்படிப்பட்ட அரசனுடைய ஆட்சியையே மக்கள் விரும்புவர். ஆனால் எவ்வளவு திட்டங்கள் அரசு போட்டாலும் அவை சேர வேண்டியவர்களுக்குப் போய் சேர்கிறதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். காரணம் அதிகாரிகள். அவர்களின் நேர்மை சந்தேகத்திற்குரியது. அவர்கள் நேர்மையாக இருந்தால் எல்லா திட்டங்களும் நன்கு நிறைவேறும், அனைவரும் பயன் பெறுவர். அடுத்தது குடிகளின் பங்கு.

அரசாட்சிக்கும் நமக்கும் தொடர்பே இல்லாதது போல் மக்கள் நடந்து கொள்கின்றனர். எந்த அரசாணையையும் மதிப்பதில்லை. (ஹெல்மெட் அணிதல், செல்போன் பேசிக்கொண்டே வண்டி ஓட்டுதல்) தேசபக்தி இல்லாமல் தன்னிச்சையாக மக்கள் நடந்து கொள்வது நாட்டிற்கு ஹானி. ஸ்வராஜ்யம் இருந்தாலும் அது ஸுராஜ்யமாக இராது. அரசு, அதிகாரி, மக்கள் இம்மூவரும் ஒருகிணைந்தால்தான் நாடு வளம்பெறும். இது உலகில் அனைத்து நாட்டுக்கும் பொருந்தும்.

அரசன் தான் ஏதோ வானத்திலிருந்து வந்தது போல் தன்னிச்சையாக நடந்து கொண்டால் அந்த நாடு விரைவில் கவிழும். இப்படி கவிழ்ந்த நாடுகள் பல. ராஜபக்தி, தேசபக்தி இவையெல்லாம் நம் நாட்டில் ஏட்டளவில்தான் உள்ளன. இவ்விஷயங்களில் நாம் மேனாட்டாரைப் பின்பற்றலாம். பின்பற்றவேண்டும். அதுவே மேன்மை. ஜனனாயகம் குடியரசு என்று வெறும் கோஷம் போடாமல் அதன் உண்மையான தத்வத்தை அனைவரும் உணர்ந்து நாடு வளம் பெற உழைக்கவேண்டும். அப்போதுதான் தலைப்பில் கூறியபடி ஸ்வராஜ்யத்தில் ஸுராஜ்யம் அமையும். நமக்கு ஸ்வராஜ்யம் வந்துவிட்டது. உண்மைதான். ஆனால் அது ஸுராஜ்யமாக இல்லை என்று மக்களுக்குத் தெரிவதில்லை. அதற்கு அவர்களுடைய பங்கு என்னவென்று தெரிவதில்லை. அதனால் தான் பல கஷ்டங்கள்.

இவை நீங்க அவரவர் கடமையைச் செய்யவேண்டும். நேர்மையான அரசனும் அதிகாரிகளும் இணைந்து செயல்பட வேண்டும். ''ந்யாய்யேண மார்கேண மஹீம் மஹீசா:''( ந்யாயமான மார்கத்தில் அரசன் அரசாளட்டும்) என்று ப்ரார்தனை செய்வோம். ஸ்வராஜ்யத்தில் ஸுராஜ்யம் அமைப்போம் என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணரின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



நான் எனப்படும் ஒரு பொருளின் சம்பந்தம் மற்றெல்லாப் பொருள்களிடம் எதுவரையிலிருக்கிறதோ அதுவரையே அவைகள் நமக்குத் தித்திக்கின்றன. நான் என்பதன் சம்பந்தம் அவைகளில் விட்டவுடன் தித்திப்பு அழிந்து விடுகிறது. அப்பொழுது தித்திக்கும் தன்மையான ஆனந்தம் எங்கிருக்கிறது? காப்பரிசியில் வெல்லமுள்ளவரை அக்காப்பரிசி தித்திக்கிறது. வெல்லத்தை அலசி அலம்பி விட்டால் தித்திக்கும் தன்மை மறைந்து விடுகிறது. தித்திக்கும் தன்மை அரிசியினதா அல்லது வெல்லத்தினதா? ஆனந்தத் தன்மை நிலத்தினுடையதா அல்லது நான் என்னும் ஆத்மாவினுடையதா? தன்னைச் சேர்ந்த பொருள்களுக்கே ஆனந்தத் தன்மையைத் தரும் ஆத்மா, ஸ்வயமானந்த சமுத்திரம் என்கிறது அவ்வுபநிடதம்.

***அபூர்யமாணம் - அசலப்ரதிஷ்டம் - ஸமுத்ரம் - ஆப: ப்ரவிசந்தி - மத்வத் ।
தத்வத்-காமா: யம்-ப்ரவிசந்தி-ஸர்வே-ஸ: சாந்திம்-ஆப்னோதி-ந-காமகாமி ॥***

என்ற இந்தச் ச்லோகத்தில் ‘யம்ப்ரவிசந்திகாமா:’ என்ற தொடருக்கு ‘ஸமுத்ரமாப:’ ‘ப்ரவிசந்தி’ எனும் தொடர் உவமையாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆத்ம ஸ்வரூபமே ஸமுத்திரம். அதுவே பூர்ண காமம். அதுவே பூர்ணானந்தம். நதிகளெல்லாம் அல்ப காமங்கள். வெளி விஷயானந்தங்கள். எவன் தன்னுடைய பூர்ணானந்த ஸ்வரூபத்தில் நிலை நின்றிருக்கிறானோ அவன் விஷயானந்தத்தைத் தேடி அலைய மாட்டான். நதிகளாம் விஷயானந்தங்கள் அவனைத் தேடி ஓடி வரும். அவ்வானந்தங்களிலும் அவன் சபலத்தையடைய மாட்டான். ஏற்றமும், இறக்கமும் இல்லாது நிறைந்த தன் ஆத்ம ஸ்வரூபமானந்தத்திலேயே அவைகள் ஒன்றாகி விடும்.

பதரிகாச்ரமத்தில் நரநாராயணயர்கள் தவம் செய்தார்கள். அவர்கள் தவத்தைக் கெடுக்க இந்திரன் அப்ஸர ஸ்திரீகளையனுப்பினான். நாராயணனுக்குக் காமம் வரவில்லை, கோபமும் வரவில்லை. அப்ஸரஸ்தீரிகள் அவரை மயக்க மேலும் அதிகமாகப் பிரயாசைப்பட அவர்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து நாராயணனுக்கு அவர்களிடம் கருணையுண்டாயிற்று. அவர் தம் துடையைத் தட்டினார். துடைக்கு ஊரூ என்று பெயர். தமக்கு வசமாயுள்ள அவரது காமம் ஊரூவைத் தட்டினவுடனே ஒரு பெண்ணுருவமாக வெளிக்கிளம்பியது. இந்திரனால் அனுப்பப்பட்ட அப்ஸரஸ்திரிகளெல்லாம் வெட்கித் தலை குனிந்தனர். அருள் பெற்றுச் சென்றனர். இந்நாராயணனே ஆனந்த சமுத்திரம்.

நரனென்னும் அர்ஜுனனையும் ஆனந்த சமுத்திரமாக்கும் வகையே கீதை.

அர்ஜுனன் யுத்தகளத்தைப் பார்த்தான். சம்பந்திகள், மைத்துனர்கள், ஆசார்யர்கள், சிறிய தகப்பனார், பெரிய தகப்பனார்கள், தமையன், தம்பிகள் அவர்களுடைய பிள்ளைகள் இவர்களையெல்லாம் கொல்ல வேண்டியிருக்கிறதே என்று சொல்லிக் கொண்டு அடக்க முடியாத துக்கத்துடன் பதறிய உடலுடன், காண்டீபம் கையிலிருந்து நழுவ தேற்ற முடியாத சோகத்தில் மூழ்கினான். அவனை எப்படியாவது சோகத்தினின்று விடுபடச் செய்வதே பகவானுடைய கருத்து. அந்தச் சோகத்தை அகற்ற எந்த எந்த முறைகளைக் கையாள வேண்டுமோ அவ்வளவு முறைகளையும் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் பகவான் கையாளுகிறார். எடுத்தவுடன் திட்டுகிறார்.

कुतस्त्वा कश्मलमिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्टं अखर्ग्यं अकीर्तिकरमनुन ।। ।। 2.2.

कश्मलम् क्षुद्रम्, என்கிற கடும் பதங்களை உபயோகிக்கிறார். ஒருவன் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தானானால் அவனை நியாயங்களைச் சொல்லி ஸமாதானப்படுத்தினால் அப்பொழுது ஏறாது. திட்டினால்தான் உடனே கொஞ்சமாவது இறங்கும். திட்டியது கோரிய பலனைக் கொஞ்சம் தந்தது. திரும்பவும், தன்னுடைய துக்க காரணத்தையே,

यानेवहत्वान जिजीविषाम:
तेऽवस्थिता: प्रमुखे धार्तराष्ट्रा: ।। 2.6.

என்று சொல்லிக் கொண்ட போதிலும்,

यच्छ्रेयस्यान्निश्रितं बूहि तन्मे
शिष्यास्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ।। 2.7.

என்று தனக்கு நல்லுபதேசம் செய்யும்படி கேட்டுக் கொள்ளும் நிலைவரையில் இறங்கினான். இந்தப் ப்ரார்த்தனையைச் செய்தானேயொழிய न योत्स्ये யுத்தம் செய்ய மாட்டேன் என்று சொல்வதை மாத்திரம் விடவில்லை. முதலில் திட்டி இவ்வளவு நிலைமைக்கு அவனைக் கொண்டு வந்து விட்டுப் பின்பு சோகத்தை வேரோடு களையும் மார்க்கத்தை அவனுக்குச் சொல்லத் தொடங்கினார்.

वेदीन्तकृत् येदविदेवचाहम् ।। 15.15

என்பது பகவானுடைய வாக்யம். வேதாந்தமென்றால் மறை முடிவான உபநிஷத்துக்கள். அம்மறைமுடிகள் சோகத்தைக் களைவதற்கு எந்த மருந்தை உபதேசிக்கின்றனவோ அம்மருந்தையே இங்கு பகவான் அர்ஜுனனுக்குக் கொடுக்க உபதேசிக்கிறார். அது என்ன மருந்து? (தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## யாசகனும் வள்ளலும்

***அனைவருக்கும் சுயநலன் உண்டு. சுயநலம் பெற யாசிக்கிறான். அதனால் பிறருக்கு நேர்கின்ற கஷ்டத்தை அவன் உணர்வதில்லை. உணர்ந்திருந்தால் கேட்க மாட்டான். யாசிப்பவனின் கஷ்டத்தை உணர்ந்தவன் யாசித்ததைக் கொடுக்காமலிருக்க மாட்டான்.***



தேவர்களுக்கும், அசுரர்களுக்குமிடையே கடும் போர் நிகழ்ந்தது. தேவர்கள் தோல்வியுற்றார்கள். எதிரிகளுக்கு பயந்து ஓடி ஒளிந்தார்கள். அசுரர்கள் அவர்களைத் தேடி அலைந்தார்கள். தேவர்களிடமிருந்த ஆயுதங்கள் தெய்வீக சக்தி படைத்தவை. அவை அசுரர்களின் கைகளில் சிக்கி விட்டால் அவற்றைத் தவறான வழியில் பயன்படுத்தி உலகை அழிப்பார்கள் எனப் பயந்த தேவர்கள் ஆயுதங்களை எங்காவது ஒளித்து வைக்க விரும்பினர். தக்க பாதுகாப்பான இடம் கிடைக்க வில்லை. வழியில் ததீசியின் ஆசிரமம் தென்பட்டது. அவர் அதர்வண மந்திரசித்தி பெற்றவர். தெய்வீகமான ஆயுதங்களின் சக்தியை வளர்த்தவர். அவரிடம் சென்று இவற்றை அசுரர் கைகளில் சிக்காதபடி காப்பாற்றும்படி வேண்டினர்.

ததீசியோ “தேவர்களே! இது ஒரு ஆசிரமம். ஓலையாலான குடில். தக்க பாதுகாப்பற்றது. நானோ முனிவர். என்னிடமும் ஒளிவு மறைவு இல்லை. இவற்றைப் பாதுகாக்க இயலாது.” என்றார். தேவர்கள் மிகவும் வற்புறுத்தினர். ததீசி “அசுரர்களிடம் ஆயுதங்கள் சிக்காதபடி பாதுகாப்பேன். ஆனால் மறுபடி ஆயுதங்கள் உங்களுக்கு வேண்டுமானால் தர இயலாது. இந்த ஆயுதங்களை மந்திரபலத்தால் நீராக்கிக் குடித்து விடுவேன். அவை என் எலும்புக்குள் கரைந்து விடும். அவற்றைப் பிறர் அபகரிக்க முடியாது. ஆனால் நீங்களும் திரும்ப பெற முடியாது” என்றார். அதற்கும் தேவர்கள் சம்மதித்தனர். தாம் இனி

வெல்லுவோம் என்ற எதிர்பார்ப்பே தேவர்களுக்கு இல்லை. ததீசி அனைத்து ஆயுதங்களையும் மந்திரங்களால் நீராக்கிக் குடித்தார். அவரது எலும்புகளில் அவற்றின் சக்தி கரைந்து விட்டது. தேவர்கள் நிம்மதியாய் வெளியேறினர்.

அசுரர்களின் தலைவன் விருத்திரன். அவன் தேவர்ககளைத் திரும்பத் திரும்பத், துன்புறுத்தினான். தேவர்கள் விஷ்ணுவைச் சரணடைந்தனர். அவர் ததீசியிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று போரிடுங்கள் விருத்திரன் அழிவான் என்றார். தேவர்கள் ததீசியகர் ஆசிரமம் சென்றனர். முன் கொடுத்த வாக்கை மறந்து ஆயுதங்களைத் திரும்பத் தரும்படி வேண்டினர். ததீசி சிரித்துக் கொண்டே சொன்னார். “தேவர்களே!” திரும்ப ஆயுதங்களைப் பெற இயலாதெனக் கூறியே அவற்றை நீராக்கிக் குடித்தேன். இன்று உங்கள் உயிரைக் காக்க என் உயிரைத் தர வேண்டும். வேறு வழியில்லை. உடலை விட்டு உயிர் பிரியும் போது ஏற்படும் வேதனை சகிக்கவொண்ணாது இதனை வலிய ஏற்பது எங்ஙனம் இயலும்? என்னைக் கொன்றால் உங்களால் அவற்றைப் பெற இயலாது. உடலை விட்டுப் பிரிகின்ற ஆத்மாவுடன் அந்த சக்தியும் சென்று விடும். வெறும் உடலில் அந்த சக்தி இராது. என்ன செய்வீர் என்றார்.

தேவர்கள் திகைத்தார்கள். “முனிவரே!” எமக்கு ஆயுதங்கள் தேவை. அதைத் தருவதானால் உமக்கு நேர்கின்ற சங்கடத்தை அறிவோம். எனினும் வேறு வழியில்லை. அதனால்தான் யாசிக்கிறோம். யாசிப்பவனுக்குக் கொடுப்பவனின் சங்கடம் பொருட்டில்லை. கொடுப்பவனின் சங்கடத்தைப் பொருட்படுத்தினால் யாசிப்பதற்கு நாக்கு எழும்பாது. நாக்கு கூசாமல் ஒருவன் யாசிக்கும் போது கொடுக்க வல்லவனால் கொடுக்காமல் இருக்க முடியாது. என்றனர். ததீசி இந்த சுய நலவாதத்தைக் கண்டு, சிரித்தார். தேவர்களின் சங்கடத்தை வளர்த்தார். யோக சக்தியால் ஆயுத சக்தியைத் தன் எலும்புகளில் பதித்தார். வேதனையின்றி தன் உயிரை உடலிலிருந்து தானே பிரித்துக் கொண்டார்.

தேவர்களின் சில்பியும் கலைஞனுமான விச்வகர்மா அவ்வுடலிலிருந்து எலும்பை அகற்றி இயந்திரங்களில் பொருத்திக் கடைந்து ஆயுதங்களாக்கினான். தேவர்கள் மறுபடி ஆயுதங்களைப் பெற்றனர். முனிவரின் மந்திரசக்தியும் அவற்றில் கூடியதால் அவை வலிவு மிக்கவையாயின. இந்திரன் விருத்திரனுடன் போரிட்டுத் தனது வஜ்ராயுதத்தால் அவனை மாய்த்தான்.

ததீசியின் கொடையுள்ளம் சரித்திரத்தில் நிலைத்த இடம் பெற்றது.

(தொடரும்)

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

इत्यशेषसमन्नायपुराणोपनिषद्रस : ।
समुद्धृत: पूर्वजातैर्व्योमयानैर्महारमभि: ।। ३२
त्वं चैतद्ब्रह्मदायाद श्रद्धयाऽत्मानुशासनम्
धारयंश्रर गां कामं कामानां भर्जनं नृणाम् ।। ३३

इति thus त्रशेष समाम्नाय पुराणेपनिषद्रस: the very essence of all the spiritual laws (the Vedas), Puranas, Upanisads etc., व्योमयानै: महात्मभि: by sages of spiritual eminence whose minds always dwelt on God. (lit. who never touched the world) पूर्वजातै: ancient समुद्धृत: was gathered together.

ब्रह्मद् O heir to Vedas or spirituality त्वं च you also नृणां of man कामानां desires of the heart भर्जनं which destroys of fires एतत् this त्रात्मानुशासनं teaching of *atman* श्रद्धया with faith and devotion धारयन् understanding and practising कामं as you please गां on the earth चर live (lit. move on)

32. *ityalesa - samannaya - puranopanisad rasah*
*samuddhr tah purvajatar - vyomayanair mahatmabhih*
*33. tvah caitad brahmadayada sraddhayat mansasanam*
*dharayamscara gam kamah kamanam bharjanam nrnam*

Gathered together in this poem are the universal principles, the very essence of the teaching of the Vedas, the Upanisads, and the Puranas, as taught by sages of spirutual eminence, whose minds always dwelt on God.


You, O reader, are heir to this spiritual wisdom. Realize this teaching of the truth of the atman and live in freedom and bliss. This realization alone can burn to ashes the desires of the human mind and fill it with the faith that grasps the Truth, with understanding, and with the ability to carry this teaching into practice.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஹிராநந்தானி மக்கள் குடியிருப்பு விஜயம்- அனுக்ரக பாஷணம்

*வைகாசி மாதம் 11ம் தேதி, மே மாதம் 25 , 2019*



சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒன்று சேர்ந்து உள்ளீர்கள். நீங்கள் அனைவரும் தர்மத்தின் ஈடுபாட்டால் சேர்ந்துள்ளீர்கள். தர்மம் எல்லோருக்கும் நல்லது செய்யும். அதுமட்டுமன்றி, எல்லோருக்கும் மன நிம்மதி, சந்தோஷம் தருவது தர்மம். தருமத்தை அனுஷ்டானம் செய்தல், பத்துபேருக்கு அதைப்பற்றி சொல்லுதல், தீர்த்தம், பிரசாதம், குங்குமம், நெய்வேத்தியம் பிறருக்கு தருதல் மன நிம்மதியைத் தருகிறது. நம்மால் நல்லது நடக்கும் என்று ஒரு நம்பிக்கை பிறக்கிறது. நம்பிக்கையை புதுப்பிக்கறது. நம்பிக்கை நிரந்தரமானது. அதற்கு ச்ரத்தை அவசியம். அதற்கு நல்ல செயல் அல்லது activity தேவை.

எப்பொழுதெல்லாம் தர்மம் தொய்வடைகிறதோ, தவறுதல் நடக்கிறதோ, தர்மம் மறக்கப் படுகிறதோ, அப்பொழுதெல்லாம் ஸ்வாமி வருகிறார். இறைவன் அவதாரம் நடக்கிறது. மச்ச அவதாரம், வராஹ, வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண போன்ற அவதாரங்கள் வேதத்தைக் காப்பாற்றவே. வேதத்தை காப்பாற்றவே முதல் அவதாரம். வேதத்தைக் காப்பாற்றினால் தான், சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும். வேதம் மிகவும் முக்கியம். அவசியம். அத்யாவசியமானது. வேதம் என்றால் ஞானம். தர்மத்தை ஸ்ருஸ்டியுடன் வளர்த்தனர்.

வேறு விதமான நியமங்கள் உள்ளன. விரதங்கள், சபரிமலை யாத்திரை, சமய நியமங்கள், மனித நியமங்கள் உள்ளன. தர்மத்தின் மூலம் சந்தோஷம் அடையலாம். பூஜைகள், பாராயணம், அன்னதானம் மூலமாக நல்வாழ்வு அடையலாம். நல்ல விஷயம் சொல்லி, பக்குவப் படுத்தி, குழந்தைகள் தாய்மூலம் வளர்கின்றனர். வேதம் ஆயிரம் தாய், தகப்பனாரை விட உயர்ந்தது.

இந்தியாவின் கலாச்சாரம் பெரியது. தேசத்தின் வெளித்தாக்கம் இல்லாத நிலையில் , வேத வாழ்க்கை இனியது. பல ஆயிரம் வருடங்களுக்கு முன், நமது நாகரீகம் அசுத்தம் செய்யக்கூடாது என்றது. நமது நாகரீகம், தர்மம் விசாலமான கண்ணோட்டம், inclusive growth என்ற கண்ணோட்டத்துடன் உடையது. தர்மம் ஒவ்வொரு க்ஷனத்திலும், தினமும் வாழ்க்கை முறையில் உள்ளது. அதுதான் நமது பலம். ஆனால் லௌகீக பலம் வேறு. தர்மம் நல்லவர்களை உருவாக்கி, நல்லதை உருவாக்கி, சக்தியை ஒவ்வொருவருக்கும் தருகிறது. நாம் கோபத்தையும், அகங்காரத்தையும் குறைத்து நன்றாக வாழ வேண்டும் எதிலும் ஆசையில்லாத நிலை. வேதாந்தத்தின் மூலம் நமக்கு சக்தி, அமருதத்வம் கிடைக்கும். நாம் நமது கடைமைகளை செய்ய வேண்டும். அதுதான் நமது சமுதாயத்தில் முக்கிய வேலை. தர்மம் நமக்கு வலிமையைக் கொடுத்து, வலியைப் போக்கிறது. கலாச்சாரத்தை பாலமாக வைத்து, தர்மத்தை நாம் தினமும் அனுசரிக்க வேண்டும். நாம் தர்மத்தை சொல்லித் தரவேண்டும். நாம் நல்லவராக, விரக்தி இல்லாமல் வாழ வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கையில் தைரியம், confidence கிடைக்கும். ஆஞ்சநேயர், சீதா தேவிக்கு ஆத்ம விச்வாசத்தைத் தந்தார். நாம் எங்கு சென்றாலும், நமது தர்மத்தைக் காக்க வேண்டும். ஜபம், பூஜை செய்ய வேண்டும். விசேஷ தர்மம், சாமான்ய தர்மம் நிறைய போய் விட்டது. புது டெக்னாலஜி மூலம் நாம் நிறைய செய்யலாம். சத்சங்கம் நிறைய செய்ய வேண்டும். கலாச்சாரம் சம்பந்தமான கல்வி நமக்குத் தேவை. மற்றும் ஞானம், யோகா தானம் தேவை.

மனித ஜென்மம் நல்லது செய்ய, நல்ல சம்ஸ்காரம் வேண்டும்.. நாற்பது சம்ஸ்காரம் உள்ளது. இதைப் பலப் படுத்த கோவில்கள், விழாக்கள், பண்டிகைகள் போன்ற பல உள்ளன. கோவில்களில் பூஜை நடக்க வேண்டும். தீபம் எரிய வேண்டும். தூப, தீப, நெய்வேத்தியம் நடை பெற வேண்டும். இவை எல்லாம் வேதத்தின் கிளைகள். கலாச்சாரத்தின் அடிப்படை தர்மம். தர்மம் சாத்வீகமானது. அதன் மூல மந்திரம் வேதம். அதுதான் வழிகாட்டி. எனவே, நாம் தர்மத்தை மறக்காமல் வாழ வேண்டும்.



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

## 84. கடலோடா கால்வ னெடுத்தேர் கடலோடும்
## நாவாயு மோடா நிலத்து

கால்வல்நெடுந்தேர் = உருளைகளை வலுவாகக் கொண்ட பெரியதொரு தேர், கடல் = கடலின்கண், ஓடா; கடன் = கடலின்கண், ஓடும் = செல்லும், நாவாயும், கைப்பனும், நிலத்து = நிலத்தின்கண், ஓடா.

எல்லோரது இயற்கைகளும், ஆற்றல்களும் ஒன்றாகவே இராது. வெவ்வேறாகவே இருக்கின்றன என்பதும், ஒவ்வொருவர்க்கும் சிறப்பு சில துறைகளிலேயே இருக்குமன்றி எல்லாத் துறைகளிலும் இருத்தல் இல்லை என்பதும், இக்குறளல் அறியக் கிடக்கின்றன.

இந்தக் குறளின் கருத்தையே மகாபாரதம் அச்வமேதபர்வம் 50வது அத்யாயம் 30வது சுலோகம் கூறுகிறது.

## 85. அறம் பொருளின்ப முயிரச்ச நான்கின்
## திறந்தெரிந்து தேறப் படும்

அறம், பொருள், இன்பம், உயிரச்சம் (இவை) நான்கின் (சோதனையால்), அறியவற்றைக் கற்று குற்றமில்லாதாரின்) திறம் = மனநிலையை, தெரிந்து = ஆராய்ந்து, தேற = நிச்சயித்தல், படும் = பொருந்தும்.

இவை நான்கினையும், தர்மோபதை, அர்த்தோபதை, காமோபதை, பயோபதை என கௌடில்யர் தமது அர்த்தசாஸ்திரத்தில் கூறி, அவற்றை நன்கு விளக்குகிறார்.

அரசன் அதார்மிகள் எனவும், அவனைக் கொன்றால் பெரும்பணம் கிடைக்கும் என்றும், அரசன் மனைவி அவனை நேசிக்கிறாள் என்றும், அரசனைக் கொல்லுவோம் என்றும் ஒருவன் மற்றொருவனைச் சோதிக்கச் சொல்லுதல் முறையே தர்மோபதை, அர்த்தோபதை, காமோபதை, பயோபதை, ஆகும்.

இவற்றிற்கு இணங்காதவனைத் தூயன் என அறிதல் வேண்டும். இந்த விஷயத்தைப் பரிமேலழகர் தமதுரையில் விரிவாய் விளக்கியுள்ளார். அதாவது:-

அறவுபதை (தர்மோபதை) ஆவது புரோஹிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப் போக்கி அறனும் உரிமையும் உடையனொருவனை வைத்ததற்கு எண்ணினான்? இதுதான் யாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை? எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது : சேனைத் தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு அவரான் இவ்வரசன் இவறன்மாலையனாவின் இவனைப் போக்கி கொடையும் உரிமையும் உடையானொருவனை வைத்ததற்கு எண்ணினான். இதுதான் யாவர்க்கும் இயைந்தது' நின் கருத்து என்ன? என சூளுறவோடு சொல்லுவித்தல். இள்பவுபலதயாவது தொன்று தொட்டு உரிமையோடு பயின்றனொரு தவமுது மகனை மகளைவிட்டு, அவளால் "உரிமையுள் இன்னள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுவித்தாள் அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும் பொருளும் கைகூடும்" எனச் சூளுறவோடு சொல்லுவித்தல் அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேவிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்வின்கண் அழைப்பிது , "இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினர்?" என்று தான் காவல் செய்து ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொல்வான். சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கு இனிய அரசனொருவனை வைத்தல் ஈண்டையாவர்க்கும் இயைந்தது; நின் கருத்து என்னை? எனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் திரிபிலனாயவழி எதிர்காலத்தும் திரிபிலன் எனக் கருத்தளவையால் தெளியப்படும் என்பதாம்.

## 86. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியும் நாணுடையான் கட்டே தெளிவு

குடி = நற்குடியில், பிறந்து, குற்றத்தின் = குற்றங்களினின்றும், நீங்கி, வடு = பழக்கு, பரியும் = அஞ்சும், நாணுடையான்கட்டே = இழிதொழிவினின் கண் மனம் செலுத்தாதவனிடத்தே, (அரசனுக்கு), தெளிவு = தெளிந்த எண்ணம், (படும் = பொருந்தும்)

படும் என்பது முதற்குறளிலிருந்து வருவிக்கப்பட்டது. குற்றத்தினின்றும் நீங்குதல், வடுப்பரிதல், நாணுடைமை, இம்மூன்றுக்கும் குடிப்பிறத்தல் சிறந்த நாரணமாகையால் அதனை ஆசிரியர் முதலிற் கூறினர் எனலாம்.

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்



விராதனிடமிருந்து புறப்பட்ட ராமலக்ஷ்மணர்கள் சீதையுடன் சரபங்க ஆஸ்ரமம் வந்து அவரை வணங்கி பஞ்சவடியில் குடில் அமைத்துத் தங்குகின்றனர். இங்கேயே 13 ஆண்டுகள் வசிக்கின்றனர். வழியில் ஜடாயுவை சந்தித்து அவர் ஆசியும் பெற்றனர். ராமனிடம் அவர் தந்த உறுதிமொழியையும் கவனிக்கவேண்டும்.

**''இதம் துக்கம் ஹி காந்தாரம்**
**ம்ருகராக்ஷஸ ஸேவிதம்**
**ஸீதாம் ச தாத ரக்ஷிஷ்யே**
**த்வயியாதே ஸலக்ஷ்மணே**

இந்த துக்கத்தைக் கொடுக்கும் கானகத்தில் விலங்குகளும் அரக்கர்களும் புழங்குகின்றனர். நீயும் லக்ஷ்மணனும் இல்லாதிருக்கையில் சீதையை நான் காப்பேன். ராமன் ஜடாயுவை சந்திக்கும்போது தன்னை அறிமுகம் செய்து கொள்ளும்போது இப்படிச் சொல்லுகிறான்.

**ததோ மதுரயா வாசா ஸௌம்யயா ப்ரீணவன்னிவ**
**உவாச வத்ஸ மாம் வித்தி வயஸ்யம் பிதுராத்மன: ।।**

வத்ஸ ராம வயோதிகனான என்னை உன் பிதாவாக கருதுவாயாக என்று இனிமையான சொற்களால் கூறினான். பின்னால் இந்த நிகழ்ச்சி விவரிக்கப்படும். சூர்பனகை வரவு கர தூஷண த்ரிசிரஸ் வதம் மாரீச மாயை ராவணன் சீதையைத் தூக்கிச் செல்லுதல் ஜடாயு ஸம்ஸ்காரம் இதெல்லாம் நடந்தபின் கபந்தன் எனும் விசித்ர மனிதனை சந்திக்கின்றனர்.

நடந்து செல்லுமிருவர்களையும் தன் நீண்ட கைகளினால் பிடித்து தன் ஒரே வாயில் கொண்டு செல்லுகிறது. அபோது லக்ஷ்மணன் ராமனிடம் என்னை இப்பூததுக்கு

பலியாக்குங்கள், வைதேஹியை கண்டுபிடித்து ராஜ்யம் அடைவீர்''ஏன்று கூற ராமர் அவனைத் தேற்றுகிறார்.

அப்போது அந்த ராக்ஷஸ வடிவம் கூறியது.

**மாம் தூர்ணம் அனுப்ரபதௌ**
**துர்லபம் ஜீவிதம் ஹி த்வாம்''**

என்னருகில் வந்தவர்கள்உயிருடன் தப்புவது கடினம்'' என்று சொல்லிக்கொண்டே மீண்டும் கூறியது.

**திஷ்டத: கிம் நு மாம் த்ருஷ்ட்வா**
**க்ஷுதார்தம்ஷத்ரியர்ஷபௌ**
**ஆஹாரார்தம் து ஸந்திஷ்டௌ**
**தைவேன ஹதசேதனௌ**

பசியுடனிருக்கும் என்னைப்பார்த்து ஏன் நிற்கிறீர்கள். தெய்வத்தால் செயலிழந்த நீங்கள் எனக்கு உணவாக நிர்ணயக்கப்பட்டுள்ளீர்கள். இதைக்கேட்ட ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து கூறுவான்.

த்வாம் ச மாம் ச புரா தூர்ணம் ஆதத்தே ராக்ஷஸாதம:
தஸ்மாத் அஸிப்யாம் அன்யா ச பாஹூ சிந்தாவஹே குரு ॥

நீயும் நானும் அரக்கனின் கைகளில் இணைக்கப்பட்டுள்ளோம். ஆகையால் இவனுடைய இரண்டு கைகளையும் வெட்டுவோம். கைகளில் மிக்க பலம் கொண்டவன் இவன் அதனால் மக்களைத் துன்புறுத்துகிறான். வதம் செய்யப்பட வேண்டியவன் இவனென்று கூறி அவனுடைய கைகளை வெட்டி வீழ்த்தினர். உடனே அவன் நீவிர் யாரென்று வினவ ராமலக்ஷ்மணர்கள் தம் வரலாற்றையும் நடந்த நிகழ்ச்சிகளையும் கூறினர். அதைக்கேட்ட அரக்கன்

**''ஸ்வாகதம் வா நரவ்யாக்ரௌ திஷ்ட்யா பஸ்யாமி வாமஹம்**
**திஷ்ட்யா ச இமௌ நிக்ருதௌ மே யுவாப்யாம் பாஹுபந்தனௌ''**

உம் இருவருக்கும் ஸ்வாகதம். இப்போது நான் ஞ்யானக் கண்ணால் பார்க்கிறேன். இதுவும் நீங்கள் என் கையை வெட்டினதால் வந்தது. என் வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்.

(தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## கோகர்ணன் கதை

36. ஏழு நாட்கள் கோகர்ணன் ஸ்ரீமத் பாகவதம் பாராயணம் பண்ண அதைக் கேட்ட துந்துகாரி அழகிய வடிவுடன் துளஸிமாலை அணிந்து, பொன்னிற ஆடையுடன் நீலவண்ணனாய், கிரீடம், குண்டலங்கள் இவைகளோடு தோன்றினான்.

37. "தன் உடன்பிறந்தவனை வணங்கினான். உன்னால் நான் பேய்த் தன்மையிலிருந்து விடுபட்டேன்" என்று கூறினான்.

38. ச்ரவண மாதம் கோகர்ணன் ஏழு ராத்ரி ஸ்ரீமத் பாகவதக் கதையை மீண்டும் சொன்னார். அது மட்டுமல்ல ஏழு ராத்ரி மற்றவர்களால் கேட்கும் படியும் செய்தார்.

39. சூரியன், சந்திரன், ஸித்தர்கள் இவர்கள் சஞ்சரிக்கும் இடங்களை ஸ்ரீமத் பாகவதம், கேட்பதால் அடையலாம்.

40. ஸ்வர்க்கலோகம், ஸத்யலோகம், கைலாயம், வைகுண்டம் ஆகிய இடங்களில் இந்த பாகவத அமுதம் கிடைக்காது. எனவே, மண்ணிலுள்ளவர்களில் பாக்யம் உள்ளவர்கள் ஒரு போதும் இந்த வாய்ப்பை விட்டு விடக்கூடாது.

41. ஸ்ரீமத் பாகவதம் புராணங்களில் திலகம் போன்றது. வைஷ்ணவர்களுக்கு இது பெரிய நிதி. இதிலல்லவா பரமாத்வைப் பற்றி தெள்ளறிவு பரக்கப் பேசப்படுகிறது.

42. உங்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலாக ஸ்ரீமத் பாகவத பாராயணம் பற்றி ஸௌனகாதி முனிவர்களே, குற்றமற்ற உங்களுக்கு என்னால் சொல்லப்பட்டது. கலியுகத்தில் ஸ்ரீமத் பாகவத கதைதான் பிறப்பெனும் நோயை அகற்றும்.

## எம்பெருமானின் அவதாரங்களில் சில

1. முதன் முதலில் எம்பெருமான் ஸனகாதி முனிவர்களாய், எப்போதும் குமாரர்களாக இளமையோடு இருப்பவர்களாய், கடினமான பிரம்மசர்யப் பூண்டவர்களாய் பிரம்மத்தை அடைய முயன்ற நால்வராய்த் தோன்றியது.

2. இரண்டாவது அவதாரம் ரஸாதளத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலமகளை வெளிக் கொணர்ந்த யக்ஞ வராஹனாம் பூவராஹப் பெருமாள்.

குறிப்பு : திருக்கடன்மலையில் ஸந்நிதி கொண்டு ஸேவை ஸாதிக்கும் பெருமாளுக்கு, "ஞானபிரான்" என்றே திருநாமம் உண்டு. வீராபுரத்தார்க்கு ஞானபிரானிடம் தனி ஈடுபாடும் பக்தியும் உண்டு. வீராபுரத்தின் மண்ணின் வாஸனைதான் அடியேன் வடமொழி அறிவும், தென்மொழிப் புலமையும்.

3. மூன்றாவது அவதாரம் இன்று ஸ்ரீ பத்ரிகாச்ரமத்தில் தவக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கும் நரநாரணர்கள்.

குறிப்பு : இன்று கிடைக்கும் ஆழ்வார் ஆசார்யர்கள் வாழ்க்கை வரலாறு நித்ய ஸூரி வைபவம் என்ற நரநாராணன் ஸம்வாதமே என்ற ஒரு செய்தி உண்டு.

4. எம்பெருமானின் நான்காவது அவதாரம் நாரதராய் அவதரித்தது.

5. எம்பெருமான் ஐந்தாவது அவதாரம் கபிலாவதாரம், தேவஹூதிக்கு ஸாங்க்ய யோகம் உபதேசித்தது அந்த ஸாங்க்ய யோகம் ஞானயோகம்.

6. ஆறாவது அவதாரம் அத்ரி முனிவர்க்கும் அனஸூயா தேவியார்க்கும் மகனாய் அவதரித்த தத்தாத்ரேயர்.

7. ஏழாவது அவதாரம் ஆகூதியின் வேள்வியில் ருசி என்பவருக்கு வேள்வியாக அவதரித்தது.

8. எட்டாவது அவதாரம் மேருவின் மகனாய் நாபேஜன் என்று அவதரித்தது.

9. ஒன்பதாவது அவதாரம் ரிஷிகளின் வேண்டுதலின் பேரில் அவதரித்த அவதாரம் உசத்தமர்.

10. பத்தாவது அவதாரம் மீனமாய் அவதரித்து வேதங்களைக் கடலினின்றும் வெளிக் கொணர்ந்து வைவச்வத மனுவிற்கு அருள்புரிந்தது.

11. பதினோராவது அவதாரம் திருப்பாற்கடலை தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடைந்த போது ஆமையாய் இருந்து மலையைத் தாங்கியது.

12. பன்னிரண்டாவது அவதாரம் தன்வந்திரியாய் ஓஷதியுடன் (அமுத கலசம்) தோன்றியது.

13. பதின்மூன்றவாது அவதாரம் மோகினியாய் அவதரித்து தேவர்களுக்கு அமுதம் அளித்தது.

14. பதினான்காவது அவதாரம் ப்ரஹ்லாதாழ்வானைப் பலகாலும் காத்து ஹிரண்யகசிபுவின் மார்வைப் கைகளால் பிளந்த ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம்.

15. பதினைந்தாவது அவதாரம் வாமனனாய் அவதரித்து மஹாபலியிடம் மூவடி மண் வேண்டி உலகளந்த த்ரிவிக்ரம அவதாரம்.

# ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு மஹா ஸ்வாமிகளின் 126-ஆவது ஜெயந்தி கொண்டாட்டம்



*அதிகாலை 5.30மணி முதல் பக்தர்கள் தரிசனத்திற்கு வந்த வண்ணம் இருந்தனர்.*

*தோராயமாக 2000 பக்தர்கள் 2 பெரியவர்களின் ப்ருந்தாவனங்களை தரிசித்தனர் . அனைவருக்கும் நீர் மோர், பானகம் வழங்கப்பட்டது. கருட சேவையையொட்டி ஸ்ரீமடம் வாசலில் நீர்மோர், பானகம், தயிர்சாதம், புளியோதரை வழங்கப்பட்டது.*

*ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் ஜெயந்தியையொட்டி 40 பேர் கொண்ட சாஸ்திர சதஸ் மற்றும் 30 பேர் பங்கு பெற்ற சதுர் வேத பாராயணங்கள் 17ம் தேதி தொடங்கி ஜெயந்தி நாளன்று நிறைவுற்றது.*

*சிவாஸ்தானத்தில் படித்த வித்யார்த்திகள் ருத்ர ஏகாதசினி பாராயணம் மற்றும் ஹோமம் செய்து அந்த கலச தீர்த்தத்தினால் ஸ்ரீ மஹா ஸ்வாமி மற்றும் ஸ்ரீ ஜெயேந்திரர் பிருந்தாவனங்களுக்கு அபிஷேம் செய்விக்கப்பட்டது.*

*ஜெயந்தியையொட்டி சங்கீத உபன்யாசம் மற்றும் இசைக்கச்சேரிகள் நடந்தேரியது.*

*வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது.*

*மாலை ஸ்ரீமஹாஸ்வாமிகளின் பஞ்சலோக சிலையுடன் தங்க ரதத்தில் ஸ்ரீமடத்தில் தொடங்கி 4 ராஜவீதிகளும் வலம் வந்து ஸ்ரீமடத்தில் நிறைவுற்றது. வேத பாராயணம், நாதஸ்வரம், கேரளா பஞ்சவாத்யம், பஜனையுடன் தங்கரதம் 4 ராஜ வீதிகளிலும் வலம் வந்தது.*

*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பரம்பரையில் 65 வது பீடாதிபதி*

*ஸ்ரீ ஸ்ரீ ஸுதர்ஸன மஹா தேவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்*

# அதிஷ்டான ஜீர்ணோத்தாரண ஸ்வர்ண பந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை



*ஸ்ரீ ஆதிசங்கரர் வழியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 65 வது பீடாதிபதியாக திகழ்ந்தவர் ஸ்ரீ ஸுதர்ஸன மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (காலம் 1851 - 1890).*

*அவரது அதிஷ்டானம் காரைக்குடி அருகில் உள்ள இளையாத்தங்குடி நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கு சொந்தமான அருள்மிகு ஸ்ரீ நித்யகல்யாணி அம்மாள் சமேத ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ளது.*

*இந்த அதிஷ்டானத்தின் ஜீர்ணோத்தாரண ஸ்வர்ணபந்தன மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ப்ரம்மீபூத ஸ்ரீஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ப்ரம்மீபூத ஸ்ரீஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் பரிபூர்ண அனுக்ரஹத்துடன் 23.6.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு மேல் 7 மணிக்குள், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 70வது பீடாதிபதி ஜகத்குரு* **பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** *அவர்களின் திருக்கரங்களால் நடைபெற உள்ளது. அவ்வமயம் ஆஸ்திக பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு கும்பாபிஷேகத்தை கண்டுகளித்து ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.*

*ஸ்ரீ என். சுந்தரேசன்*
*மேனேஜிங் ட்ரஸ்டி, மேலும் மற்ற ட்ரஸ்டிகள்*
*இளையாத்தங்குடி*
*ஸ்ரீ மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி*
*ஸ்வாமிகள் டிரஸ்ட்*

*காலடி ஸ்ரீ விஸ்வநாத ஐயர்*
*ஸ்ரீ கார்யம் - ஏஜண்ட்,*
*ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்,*
*காஞ்சிபுரம்*


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 57-வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## பூஜ்யஸ்ரீ பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் அதிஷ்டானம் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்

இவ்வுலகில் காசிக்குச் சமமாக விளங்கும் ஆறு க்ஷேத்ரங்களில் ஒன்றானதும், நவக்கிரஹங்களில் புதன் கிரஹத்தின் இருப்பிடமானதும் ஸ்ரீ ஸ்வேதாரண்யம் என்னும் திருவெண்காடு க்ஷேத்ரத்தின் பிரம்மவித்யா உடனுறை ஸ்ரீ சுவேதாரண்ய சுவாமி கோயிலின் வடபாலும் மணிகர்ணிகா என்ற புனித பெயர் கொண்ட காவேரி நதியின் தென்பாலும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் கோயிலின் எதிர்புறம் ஸ்ரீ சரபோஜி மஹாராஜாவால் தானமாக அளிக்கப்பட்டு அக்னிஹோத்ரிகளை சரிவர அக்னிஹோத்ரம் நடத்திவர நியமித்த பூசூரர்கள் நிறைந்த சரபோஜி அக்ரஹாரத்தில் அத்வைத மதம் நிலை நிறுத்திய அவதார புருஷர் ஈஸ்வரனின் அவதாரமான ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளின் மூலாம்னாய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியத்தின் வழிவந்தவரும் மஹாதபஸ்வியுமான ஸ்ரீ ஸதாசிவப்ரும்மேந்திராள் அவர்களின் குரு நாதராக விளங்கியவரும் ஆகிய ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் 57வது பீடாதிபதியாக திகழ்ந்தவருமான பூஜ்யஸ்ரீ பரமசிவேந்திர சரஸ்வதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானம் ஜீர்ணோத்ராரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 70-ஆம் பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதீ சுவாமிகள் அருள் ஆக்ஞை பிரகாரம் அவர்கள் தம் விசேஷ அருள் அனுக்ரஹ ஆசிகளுடன் அதிஷ்டானம் - அதிஷ்டானத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கணபதி - ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி - ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி - ஸ்ரீ சூரியன் - ஸ்ரீ சந்திரன் - ஸ்ரீ சண்டிகேஸ்வரர் - ஸ்ரீ நாகர் சந்நிதிகளும், ஸ்ரீ சக்ரேஸ்வரி அம்பாள் ஸந்நிதி ஆலயங்கள் அனைத்தும் ஸ்ரீமடம் சிஷ்யர்களால் உபய திருப்பணிகள் செய்யபட்டு, மஹா கும்பாபிஷேகம் வைதீக பிரதிஷ்டா விதிப்படி, ஸ்ரீ காஞ்சி ஸ்ரீமடம் சார்பில் ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருடம் வைகாசி மாதம் 15-ம் தேதி (29.05.2019) புதன்கிழமை தசமிதிதி உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 11.15க்கு மேல் 1.20 மணிக்குள் சிம்ம லக்னத்தில் ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதீ ஸ்வாமிகளின் பரிபூர்ண அருள் ஆசியுடன் இனிதே நடைபெற்றது.

இந்த மஹா கும்பாபிஷேக வைபவத்தில் பக்தகோடிகளும், ஸ்ரீமட சிஷ்யர்களும், ஊர் பொதுமக்களும், பெரியோர்களும் நேரில் வந்து கலந்துகொண்டு பூஜ்யஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் குருவருளையும், திருவருளையும் பெற்றனர்.

# ஸ்ரீ க்ருஷ்ண நமஸ்காரம்



*நமோ ப்ரஹ்மண்யதேவாய கோப்ராஹ்மணஹிதாய ।*

*ஜகத்ஹிதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ॥*

இந்த ச்லோகம் ஸ்ரீ மகாபாரதம் சாந்தி பர்வத்தில் இருக்கிறது. காலையில் எழுந்தவுடன் இந்த ச்லோகத்தை ஸ்மரிக்க வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**இந்த ச்லோகத்தைப் பற்றிய சில விவரங்கள்:**

உலகம் முழுவதற்கும் ஹிதத்தைக் கோருவதே நமது முதற் கடமை.

**'ஸ்வஸ்தி ப்ரஜாப்ய:' என்ற ச்லோகத்திலும் 'லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து**' என்று முடிந்திருக்கிறது.

இந்த ச்லோகத்தில் பொதுவாக உலக க்ஷேமத்தைக் கோரியிருந்தும், பசுக்களையும் பிராம்மணர்களையும் ரக்ஷித்து அவர்கள் க்ஷேமமாக இருக்க வேண்டும் என்று ஏன் சொல்ல வேண்டும்? அவையும் அவர்களும் உலகத்தில் அடங்கினவர்கள் தாமே? ஆகையால் இதற்குக் காரணம் நன்றாக விளங்கவில்லை என்று சொல்லக்கூடும். **''வையகம் துயர் தீர்க்கவே''** என்று பொதுவாக முடியும் சம்பந்த ஸ்வாமிகள் பாடலிலும், **''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்''** என்று சிறப்பாக கூறியிருக்கிறது. இப்படிச் சொல்லுவதற்கு காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

சைவர்கள், வைஷ்ணவர்கள், வேதாந்திகள் ஆகிய நம் எல்லாருக்கும் இது பொதுக் கொள்கையாகக் காண்கிறது. இப்போது ஸந்தேகத்தைப் பற்றி நாம் எல்லாரும் விசாரித்துத் தத்துவத்தை அறிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். உலகத்தில் யார் எவ்விதக் கேள்வி கேட்டாலும் அதற்கெல்லாம் தகுந்த பதில் கீதா சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது.

**ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபால நந்தந:**
**பார்த்தோ வத்ஸ: ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்**

–கீதா மங்களாசரணம், 4

எல்லா உபநிஷத்துக்களும் பசுக்களாம். அவற்றைக் கறக்கும் ஆயன் ஸ்ரீகிருஷ்ண பகவான். அந்தப் பசுக்களின் கன்று அர்ச்சுனன். அந்தப் பசுக்களிடம் கறந்தபால் கீதை என்பதாகும். பாலைக் குடிப்பவர்கள் வித்வான்கள்.

லோகத்தில் ஓர் ஆயன் பால் கறக்க வேண்டுமானால் மாட்டுடன் கன்றையும் கொண்டுபோக வேண்டும். பால் கன்றுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படுவது போல், கீதா சாஸ்திரம் யார்க்கு எவ்விதச் சந்தேகம் உதித்தாலும் அதைப் போக்கும். யார் எவ்விதக் கேள்வி கேட்டாலும் அதற்குப் பதில் அதில் இருக்கும்.

அநேக கிரந்தங்கள் இருந்தாலும் சிலவற்றை எடுத்துக்கொள்ள முக்கியமான காரணம் உண்டு. இக்காலத்தில் எல்லோரும் கீதை உயர்ந்த தத்துவக் கிரந்தம் என்று ஒப்புக்கொள்கிறார்கள் அல்லவா? அதில் சொல்லும் தத்துவங்கள் என்ன என்பதில் ஒருவருக்கும் ஆட்சேபம் இல்லை.

இப்படிப் பெரியவர்கள் ஒப்புக்கொண்ட புஸ்தகத்திலிருந்து முன்சொன்ன சந்தேகத்துக்குத் தகுந்த பதில் கிடைக்குமானால் எல்லோருக்கும் நிச்சயமான நம்பிக்கை ஏற்படும்.

இவ்வுலகில் மனிதர்களாகிய நம்முடைய ஜீவன ரீதியைக் கவனிப்போம். ஓர் ஊரில் ஒரு பொருள் அதிகமாக விளைந்தால் அதைப் அந்தப் பொருள் விளையாத ஊருக்கு அனுப்பி, நம் ஊரில் விளையாததும் அந்த ஊரில் விளைவதுமான மற்றொரு பொருளை வாங்கி வருகிறோம். தச்சன், கொல்லன் முதலியவர்கள் நமக்காகச் சில காரியங்களைச் செய்கிறார்கள். அதற்காக நாம் அவர்களுடைய காலக்ஷேபத்திற்கு வேண்டிய திரவியம் கொடுக்கிறோம். பசுக்களுக்குப் புல் போடுகிறோம். அவை நமக்குப் பால் கொடுக்கின்றன. நாம் ராஜாங்கத்திற்கு வரி கொடுக்கிறோம். அவர்கள் நமக்குத் தீங்கு வராமல் காவல்கட்டுச் செய்கிறார்கள். இப்படி உலகம் முழுவதுமே பரிவர்த்தனைக் கிரமத்தில் நடந்து வருகிறது. இப்படியே நாம் லோகாந்தரங்களுடன் சில பரிவர்த்தனை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இஞ்சினீயர் முதலியவர்கள், பெய்த மழைநீரை ஒழுங்காப் பிரித்து, ஆறு வாய்க்கால் முதலியவற்றில் பாயும்படி விடுவார்களே தவிர, மழை பெய்யும்படி செய்ய அவர்களால் முடியாது. மழை பெய்ய வேண்டுமானால் நாம் சில பொருள்களைத் தேவலோகத்திற்கு அனுப்ப வேண்டும்.

மழை என்றால் மழைக்காக மாத்திரமல்ல; மழையின் சக்திக்கு மீறி மனிதர்களுடைய உபயோகத்திற்காக வேண்டிய எல்லாச் சக்திகளும் நம் அறிவிற்கெட்டாத ஓர்

இடத்திலிருந்துதான் வருகின்றன. அவை எங்கிருந்து வருகின்றனவோ அந்த இடத்திற்கு நாம் செலுத்தும் கடமை வேதமென்னும் சட்டமுறைப்படி நாம் அர்ப்பணம் செய்யும் கர்மாநுஷ்டானம். இதையே கீதை சொல்லியிருக்கிறது.

**ஸஹயஜ்ஞா: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா புலோவாச ப்ரஜாபதி: ।**
**அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ வோஸ்த்விஷ்டகாமதுக் ॥**
**தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ: ।**
**பரஸ்பரம் பாவயந்த: ஸ்ரேய: பரமவாப்ஸ்யத ॥**

-கீதை, 3, 10-11.

இதன் அர்த்தம்-முதலில் பிரம்மா பிராணிகளைச் சிருஷ்டித்த போது யஜ்ஞத்தையும் சிருஷ்டித்ததார். அப்பொழுது அவர்களைப் பார்த்து, ''இந்த யஜ்ஞத்தைச் செய்து நீங்கள் க்ஷேமத்தை அடையுங்கள். இந்த யஜ்ஞத்தினால் நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்து வையுங்கள். அந்தத் தேவர்கள் உங்களக்கு வேண்டிய க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். இப்படியே நீங்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொண்டு மேலான க்ஷேமத்தை அடையுங்கள்'' என்றார், என்று பகவான் கூறுகிறார்.

யஜ்ஞம் என்பது மந்த்ரம், தேவதை, ஹவிஸ் என்ற மூன்று ஸ்வரூபமாக உள்ளது. அவற்றுள் மந்த்ரம் என்பது, ப்ராஹ்மணனால் சொல்லப்பட வேண்டும். ஹோமம் செய்வதற்கு முக்கியமாக வேண்டியது பசுவின் நெய். இந்தக் காலத்தில் பிராம்மணர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் படிக்கிறார்கள். அவர்கள் வேதாத்யயனம் செய்யவில்லை. இங்கிலீஷ் படித்தவர்கள் பிறகு வேதாத்யயனம் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் சரியான உச்சாரணம் செய்ய முடிவதில்லை.

ஆகையால் இக்காலத்தில் பிராம்மணர்களிடம் மந்த்ரசக்தி இல்லை. கர்மாக்களை ஒருவரும் ஒழுங்காகச் செய்யாததனால் தேவதா த்யானம் சரியாக இல்லை. பசுவின் பால் பெரும்பாகம் காபிக்கு உபயோகப்படுகிறது. ஆகையால் சுத்தமான பசு நெய்யும் கிடைப்பதில்லை.

யஜ்ஞத்திற்கு முக்கியமான மந்திரத்தை அத்யயனம் செய்வதனால் பிராம்மணனைம், ஹோமத்ரவியமான நெய்யைக் கொடுப்பதனால் பசுவையும் எல்லா இடத்திலேயும் - மேல்கண்ட ச்லோகங்களிலும், திருஞானசம்பந்தர் பாசுரத்திலும் - தனியாகச் சிறப்பித்துக் கூறியதாக எண்ண வேண்டியிருக்கிறது. யஜ்ஞத்தினால் ஏற்படும் க்ஷேமம் பிராம்மணர்களுக்கும் பசுக்களுக்கும் மட்டும் அல்ல; உலகத்தில் எல்லாருக்குமே

க்ஷேமத்தைக் கொடுப்பது யஜ்ஞம். யஜ்ஞங்கள் செய்தால்தான் லோகம் க்ஷேமமாக இருக்கும். யஜ்ஞம் ஒழுங்காக நடக்க வேண்டுமானால் பிராமம்மணர்களும் பசுக்களும் க்ஷேமமாக இருக்க வேண்டும்.

இதுவே ஜகத்தின் க்ஷேமத்திற்கு உண்மையான காரணம். தன்னலம் கருதாமல் ஜகத்தின் ஹிதத்தையே நாடுவது பிராம்மணர்களின் கடமை.

தான் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் வேதம் உபதேசிக்கும் விதியைத் தழுவித் தான் அநுஷ்டித்து, அதன்மூலம் ஜகத்தின் ஹிதத்திற்குப் பாடுபடுவதே உண்மையான லோக ஸேவை. இவ்விதத் தொண்டு புரிவதற்கு, பகவானுடைய அருளே அஸ்திவாரம். அதை ஆதாரமாகக் கொண்டு புரியும் கர்மாநுஷ்டானத் தொண்டே இப்போது உலகத்தில் உள்ள கலக்கத்தைத் தெளிய வைக்க கூடியது.

இதுவே சைவம் சாக்தம் வைஷ்ணவம் முதலிய எல்லா ஆஸ்திக மதங்களுக்கும் பொதுவான கொள்கை. ஆகையால் முதலில் பகவான் கிருபை வேண்டும். ஒவ்வொரு நாளும் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவுடன்,

**நமோ ப்ரஹ்மண்யதேவாய கோப்ராஹ்மணஹிதாய ।**
**ஜகத்ஹிதாய க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ॥**

என்பதை ஸ்மரித்து, பகவானிடத்தில் திரிகரணங்களையும் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

**--வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை.**

## கலை(ந்த)ச்சொற்கள் மே விடைகள்


1. சதமானம் பவதி
2. ரஹஸ்யத்ரயம்
3. உன்னைப்போல் ஒருவன்
4. நசிகேத உபாக்யானம்
5. கங்காயாம் கோஷ:

## கலை(ந்த)ச்சொற்கள் ஜூன் வினாக்கள்

1. வகல்சனடம்பறதமாலி
2. கச்ம்யாளா தமண்ட
3. தவைகர்திவமர்னிதி
4. முசைத்திவருறைள்க
5. பாகுஜிதம்தஞ்

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 14

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்



ஸமித்பாணியாக ஞானிகளை அணுக வேண்டும். முண்டகோபனிஷத்தில் இப்படி கூறப்பட்டுள்ளது. ஆத்மஸ்வரூபத்தை உணருவதற்கு குருவையே அண்ட வேண்டும். அவரும் ப்ரம்ம நிஷ்டராயிருத்தல் அவஸ்யம். அவரும் கூட லோக்ஸங்க்ரஹார்த்தம் தான் அனுஷ்டானங்கள் செய்யாவிடில் மக்கள் செய்யாமற்போவாரே

என்று எண்ணி குருவும் செய்வாராகையால் அவரைப் பார்க்க செல்லும் போது ஸமித் முதலியவைகளை எடுத்துச் செல்ல வேண்டும். சாங்கரபாஷ்யத்தில் இப்படிக் கூறப்பட்டுள்ளது. இதை கூறிவிட்டு பெரியவர்கள் சுவையான விளக்கத்தையும் கூறினார். ஸமித்பாணி என்பதற்கு பாணிகளை (இரு கைகளை) நன்கு கூப்பி அஞ்சலி பந்தமாக கைகூப்பி என்பதும் இதற்குப் பொருள். (ஸம்யக் இமௌ பாணீ யேன)ஸமித் போன்றவை கிடைக்காவிடினும், கிடைத்தாலும் அஞ்சலி பந்தமாக வினயத்துடன் குருவை அணுக வேண்டும் என்று புதிய விளக்கத்தை அருளினார்கள். பெரியவர்களின் பாண்டித்யம் பற்றி வியப்புற்றோம்.

உபனிஷத்தில் சொல்லணி ப்ராஸம் போன்ற சொல்லணிகளும் சப்தாலங்கரத்தைச் சேர்ந்தவை) உபனிஷத்களில் உண்டு. ஒரே எழுத்து அல்லது ஒரே பதமானது அடிக்கடி ஒலித்தால் அடுக்கு மொழி எனும் பிரிவு உண்டு என காவ்யத்தில் கூறுகிறார்கள். தைத்ரீய உபனிஷத்தில் இவ்வாறு கூறப்படுகிறது.

**அஹம் வ்ருக்ஷஸ்ய ரேரிவா**
**கீர்த்தி:ப்ருஷ்டம் கிரேரிவா''**

இங்கு ஞ்யானி தன் அனுபவத்தைக் கூறுகிறார். தான் இந்த உலகமாகிய மரத்தின் அடிப்படைக் காரணமாயிருந்து இதை உயிர்ப்பிக்கிறேன். எனது புகழ் கிரியைப் போல் உயரமானது.

ரேரிவ தூண்டுபவன் கிரேரிவ மலைக்குச் சமானமானது என்று சொல்லணி வந்துள்ளது என்று ஒரு சமயம் பெரியவா எடுத்துக் காட்டினார்.

# புராணக் கதை

## சத்துமாவு வேள்வி

*காஞ்சி வாதூலன்*

மாபாரதப்போர் நடந்து முடிந்து தர்மர் அச்வமேதம் செய்கிறார். ஏராளமான பொருட்செலவு, இவன் அவன் என்று பார்க்காமல் தானம் வழங்கினார். ப்ராமணர்களின் ஆசியுடன் வேள்வி முடிந்தது. அங்கிருந்த யாவர் மனத்திலும் நிறைவு. இதுபோல் யாரும் செய்ய முடியாது என்று ஒரு இறுமாப்பு.

இந்த நிலையில் அனைவரும் இருக்க ஒரு கீரிப்பிள்ளை அங்கு வந்து புரண்டது. அதன் உடலின் பாதி தங்க மயமாக இருந்ததைக் கண்ட தர்மர் அதன் காரணத்தை வினவினார். அது ஒரு கதையை சொல்லியது.

நான் குருக்ஷேத்ரத்திலிருந்து வருகிறேன். அன்னாட்டில் ஒரு ஏழை ப்ராம்மணன் தன் மனைவி மகன் மறுமகளுடன் உஞ்சவ்ருத்தி செய்துகொண்டு வாழ்ந்துவந்தான். ஒரு சமயம் கொடுமையான பஞ்சம் வந்தது. நீர்நிலைகள் வற்றின. மரம், செடி, கொடிகள் பட்டுப்போய் தீப்பற்றிக்கொண்டன.

அச்சமயத்தில் ஒரு நாள் அந்த பார்ப்பான் தான் உஞ்சவ்ருத்தியில் கிடைத்த சத்துமாவை நாங்காகப் பகிர்ந்து சாப்பிட அமர்ந்தான். அப்போது ஒரு அதிதி அங்கு வந்து உணவளிக்க கேட்டார். அவரை நமஸ்கரித்து, உபசரித்து அவருக்கு தன் பங்கான சத்துமாவை கொடுத்தார். அந்த அளவு போராமல் இன்னும் கொஞ்சம் கேட்டார்.

அவர் மனைவி தன் பங்கை அவருக்கு அளிக்க முன் வந்தாள். அந்தணனுக்கோ அவ்வளவாக அது பிடிக்கவில்லை. அட புழு பூச்சிகள் கூட தங்கள் ஸ்த்ரீக்களை காப்பாற்றுகின்றன. எல்லா யாகங்களிலும் அனுஸரணையாக இருந்து நடத்திக் கொடுப்பவள் பத்னீ. அவளை காப்பாற்றாத கணவனால் என்ன பயன்?

ஏற்கனவே வாடிப்போயிருக்கும் நீ உன் பங்கைக் கொடுக்க வேண்டாம் என்றார். அதற்கு அவள் உம்மில் நான் சரிபாதி. நாம் இருவரும் சேர்ந்து கர்மாக்களை செய்வோம் என்று சபதம் எடுத்துள்ளோம். நீர் எனக்கு குரு. என்னைக் காப்பாற்றுபவரும் நீர்தான். உமக்குக் கஷ்டம் வரும்போது நான் சும்மாயிருக்க முடியுமா ஆகவே என் பங்கையும் தருகிறேன் என்று கூறி தன் பங்கான சத்துமாவை அந்தணனுக்கு அளித்தாள்.

அப்போதும் அவருடைய பசி தணியவில்லை. அது கண்டு அவர் மகன் என்னுடைய பங்கை நான் அளிக்கிறேன். வயது முதிர்ந்த உங்களைக் கப்பாற்றுவது என் கடமை. அதிதி ஸத்காரம் செய்யமுடியாமல் நீங்கள் தர்மத்திலிருந்து தவறக்கூடாது. ஆகவே என் பங்கை அவருக்கு அளிக்கவும் என்றான்.

அது கண்டு ப்ராம்மணர் நீ ஆயிரம் வயதிலிருந்தாலும் என் குழந்தை. எங்கள் காலம் கடந்துவிட்டது. வாழவேண்டியவர்கள் நீங்கள். வளரும் நீ அப்படி செய்யவேண்டாம் என்றார். அப்பா நான் உங்கள் பிள்ளை. புத் என்னும் நரகத்திலிருந்து உம்மைக் காப்பாற்றுவதால் புத்ரன் என்று பெயர். தந்தைதான் மகனாகப் பிறக்கிறான் என்று வேதம் கூறுகிறது. புத்ரரூபத்தில் உள்ள என் மூலமாக உம்மைக்காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்றான்.

அவன் பங்கை உண்டபின்னும் அதிதி பசியாறாதது கண்டு மருமகளும் தன் பங்கை அளிக்க வந்தாள். அதைக் கண்ட பார்ப்பனன் பெண்ணே எங்கள் கஷ்டம் எங்களோடு போகட்டும். நீ தர வேண்டாம் என்றான். அதற்கு அவள் உமது பிள்ளையின் மூலமாக பேரன் வருவான். வைதிகக் கர்மாகளுக்கு அவன் அவஸ்யமல்லவா?

அப்புகழ் மங்காதிருக்க என் பங்கைத் தருவேன் என்றாள். அதற்கு அந்தணன் ஏற்கனவே வாடி வதங்கியுள்ளாய். உன்னைப் போஷிக்க எம்மால் முடியவில்லை. மாட்டுப் பெண்ணை சரியாக நடத்தாதவர்கள் இழிந்தவர்கள். நீயும் பசியினால் வாடுகிறாய் அதனால் உன் பங்கைத் தர வேண்டாம் என்றார். அதற்கு அவள் என் கணவர் எனக்குத் தெய்வம், நீரோ அவருக்குத்தெய்வம். நீர் எங்கடவுளுக்கு கடவுள்.

உங்கள் வேள்விக்கு உதவாமல் நான் இருக்கக்கூடாது. எனவே என் பங்கை அதிதிக்கு அளிக்கிறேன் என்று கூறி அதை அளித்தாள். வந்த அதிதியும் பசியாறி தர்ம தேவதையாக காக்ஷி அளித்தது.

உங்கள் வேள்வி போல் யாரும் செய்தது கிடையாது. ஒத்தமனத்துடன் உங்கள் பசியையும் அடக்கிக் கொண்டு செய்த தானத்துக்கு எதுவும் ஈடாகாது. நீங்கள் மட்டுமல்ல உங்கள் ஈரேழுதலை முறையும் மோக்ஷமடையும். பசியை வெல்வது கடினம். தானம் கூட பாத்ரம்,

காலம் அறிந்து இடவேண்டும். ஆயிரம் வைத்துக்கொண்டு நூறு தருபவன். நூறு வைத்துக்கொண்டு பத்து தருபவன் ஒன்றுமேயில்லாதவன் நீர் தருபவன்

அனைவருக்கும் நற்கதி கிடைக்கும். வாடிய பயிருக்கு நீர் தருபவன் ஸ்ரேஷ்டனன்றோ.

டாம்பீகமான தானங்களோ படாடோபத்துடன் செய்பவைகளால் புண்யம் பெற முடியாது. சுத்தமான இதயத்துடன் செய்யப்படும் சிறிய தானம் மேன்மையுடைத்து ரந்திதேவன் போல் யார் இருப்பர். நீங்கள் செய்த இந்த தானத்தால் ஸ்வர்கத்துக்குப் போக ரதம் சித்தமாயுள்ளது என்று கூற அந்த நால்வரும் ஸ்வர்கம்போயினர்.

கீரி கூறியது. இதையெல்லம் பார்த்த நான் அந்த அதிதி ஸத்காரத்தில் சிதறிய மாவைத் தின்னச் சென்றேன். அங்கு வீழ்ந்து புரண்டதில் என் பாதி உடல் பொன்னிறமானது. மீதி பாதியையும் பொன்னிறமாக்க யாகங்கள் நடைபெறும் இடங்களுக்குச் செல்கிறேன். தர்மரின் யாகத்திலாவது அப்படி நடைபெறும் என்று வந்தேன். ஆனால் அப்படி நடக்கவில்லை. அந்த சத்துமாவு வேள்விக்கு இணை நீங்கள் செய்த யாகம் இல்லை என்று உணருங்கள் என்று கூறி கீரிபிள்ளை மறைந்தது. வந்திருந்த அனைவரும் ஆச்சர்யத்துடன் நின்றனர்.

## ஸனாதன தர்மப்புதிர்கள் மே விடைகள்

1. மனு
2. ஜவன்
3. சண்டாமர்கர்கள்
4. விராதன்
5. விஸ்ரவஸ் கேசினீ
6. மஹதீ
7. திருவெழுகூற்றிருக்கை
8. பொதிகை
9. திருவைய்யாறு
10. உஜ்ஜயினீ

## ஸனாதனதர்மப்புதிர்கள் ஜூன் வினாக்கள்

1. கஜேந்த்ரமோக்ஷத்தில் கருடனின் சிறப்பு என்ன
2. சூர்பனகை போல லக்ஷ்மணரின் பேரில் காதல் கொண்டவள்
3. ஆதிசங்கரரின் நான்கு சிஷ்யர்கள்
4. அம்பாளின் தர்ம பீடம் எங்குள்ளது?
5. அகத்தியரின் ஆஸ்ரமம் இப்போது உள்ள இடத்தின் பெயொ்
6. இது ஒரு சங்க நூல் திருமுறையிலும் இடம் பெற்றுள்ளது.

7 பரதப்புழா நதியின் உத்பத்திஸ்தானம்

8 கான்சியில் காய்ச்சலைத்தீர்க்கும் ஸ்வாமி

9 நீலகண்டீ வ்யாக்யானம் எதற்கு?

# வேதாந்த ஸாரம்

## ஸாதானந்த யோகி

வேங்கடகணபதி சர்மா

*ஏதத் உபஹிதம் சைதன்யம் ஸர்வஞ்யத்வ ஸர்வேஸ்வரத்வ*
*ஸர்வ நியந்த்ருத்வாதிகுணகமவ்யக்தம் அந்தர்யாமீ ஜகத்காரணம்*
*ஈஸ்வர இதி ச வ்யபதிஸ்யதே ஸகலஞ்யான அவபாஸகத்வாத் ।*
*''ய: ஸர்வஞ்ய: ஸர்வவித்'' (முண்டகோபனிஷத்) இதி ஸ்ருதே: 38*

இப்படி சொல்லப்படும் சைதன்யம் எல்லாமறிந்ததாயும் ஸர்வேசவரனாயும் எல்லாவற்றையும் அடக்குபவராயும், அந்தர்யாமியாயும் ஜகத்துக்கு காரணமாயும் சொல்லப்படுகிறது. எவன் ஸர்வஞ்யனும் ஸர்வவித்தாயுள்ளானோ என்று முண்டகம் கூறும்.

*ஈஸ்வரஸ்யேயம் ஸமஷ்டி அகிலகாரணத்வாத் காரணசரீரம்*
*ஆனந்தப்ரசுரத்வாத் கோசவதாச்சாதகத்வாத் ஆன்னதமயகோச:*
*ஸர்வ உபரமத்வாத் ஸுஷுப்திரத ஏவ ஸ்தூல ஸூக்ஷ்மப்ரபஞ்ச*
*லயஸ்தானமிதி ச உச்யதே । 39*

இப்படி கூறப்படுமீஸ்வரனின் ஸமஷ்டி அஞ்யானம் எல்லாவற்றிற்கும் காரணமாவதால் காரண சரீரம் எனப்படும். முழுவதும் ஆனன்தமயமாய் உள்ளதால் ஆனந்தமயகோசம் என்றும், எல்லாம் இதில் ஒடுங்குவதால் ப்ரலயம் என்றும், ஸ்தூல ஸூக்ஷ்மங்கள் இதில் ஒடுங்குகின்றன என்றும் கூறப்படுகிறது.

*யதா வனஸ்ய வ்யஷ்டி அபிப்ர்யேன வ்ருக்ஷா இத்யனேகத்வவ்யபதேசோ*
*யதா வா ஜலாசயஸ்ய வ்யஷ்டி அபிப்ராயேண ஜலானீதி ததா*
*ஞ்யானஸ்ய வ்யஷ்டி அபிப்ராயேண தனகேத்வ வ்யபதேஸ: ''*
*இந்த்ரோ மாயாபி: ப்ருருப ஈயதே'' (ருக்வேதம்) இத்யாதி ஸ்ருதே: । 40*

தனியாக உள்ள போது மரமென்றும் கூட்டமாகப் பார்க்கும்போது வனமென்றும் தனியாக ஜலமென்பது கூட்டமாக ஏரி, ஜலாசயமென்றும் கூறப்படும் அதுபோல அவித்யை வ்யஷ்டியில் பலவாக தோன்றும். இந்த்ரன் மாயையினால் பலவாகத் தோன்றுகிறான் என்று ருக் வேதம் கூறும்.

*அத்ர வ்யஸ்த ஸமஸ்தவ்யாபித்வேன வ்யஷ்டி ஸமஷ்டிதா வ்யபதேஸ 41*

அவித்யை உபாதிகளோடு சேர்வதை வைத்து வ்யஷ்டி, ஸமஷ்டி என்று கூறப்படும்.

*இயம் வ்யஷ்டிர்னிக்ருஷ்ட உபாதிதயா மலினஸத்வப்ரதானா । 42*

மட்டமான உபாதியோடு சேர்ந்துள்ள இந்த அவித்யை மலினஸத் வத்தை ப்ரதானமாகக் கொண்டது.

*ஏதத் உபஹிதம் சைதன்யம் அல்பஞ்யத்வாத் அனீஸ்வரத்வாதிகுணகம்*
*ப்ராஞ்ய இத்யுச்யத ஏகாஞ்யான அவபாஸகத்வாத் ।* 43

இப்படி கிஞ்சிஞ்யன், அனீஸ்வரனாயுள்ள சைதன்யம் ப்ராஞ்யன் என்று கூறப்படுகிறான். தனி அவித்யையில் இவன் ப்ரகாசிக்கிறான்.

*அஸ்ய ப்ராஞ்யத்வம் அஸ்பஷ்ட உபாதிதயா அனதிப்ரகாசத்வாத் । 44*

ஸ்பஷ்டமாக அப்ரகாசமாக இல்லாத உபாதியை அடைந்திருப்பதால் ப்ராஞ்யன் என்று ஜீவனுக்குப் பெயர்.

॥ ஸ்ரீ: ॥
இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.
Contact : V.K.N. Enterprises (Printer)
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# ஆனி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 15-06-2019 | சனி | அனுஷம் தேர் |
| 16-06-2019 | ஞாயிறு | அனுஷம் பாராயணம் |
| 16-06-2019 | ஞாயிறு | பௌர்ணமி பூஜை |
| 17-06-2019 | திங்கள் | மூலம் தேர் |
| 19-06-2019 | புதன் | உத்ராடம் தேர் |
| 20-06-2019 | வியாழன் | உத்ராடம் பாராயணம் |
| 20-06-2019 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி |
| 22-06-2019 | சனி | அவிட்டம் பாராயணம் |
| 22-06-2019 | சனி | அவிட்டம் தேர் |
| 29-06-2019 | சனி | ஏகாதசி |
| 30-06-2019 | ஞாயிறு | துவாதசி |
| 30-06-2019 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 12-07-2019 | வெள்ளி | ஏகாதசி |
| 12-07-2019 | வெள்ளி | அனுஷம் தேர் |
| 13-07-2019 | சனி | துவாதசி |
| 13-07-2019 | சனி | அனுஷம் பாராயணம் |
| 14-07-2019 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை 1 |
| 15-07-2019 | திங்கள் | மூலம் தேர் |
| 16-07-2019 | செவ்வாய் | தக்ஷிணாயண புண்யகாலம், பௌர்ணமி பூஜை, வ்யாஸ பூஜை - குரு பூர்ணிமா |
| 21/06/19, 28/05/19, 05/07/19 - 12/07/19 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஸபா ரஞ்ஜன சதகம்

*நீலகண்ட தீக்ஷிதர்*

## ந்ருபத்வம் - (அரசனாயிருத்தல்)

*உச்சாவசம் ஜகத்தௌ:ஸ்த்யம் ஏகதேவ நிஷேததி*
*ப்ரவிஷ்டமாத்ரோ ந்ருபதி:ப்ரபஞ்சமிவ ந: ஸ்ருதி: 100*

*ந ராஜானம் வினா ராஜ்யம் பலவத்ஸ்வபி மந்த்ரிஷு*
*ப்ராணேஷ்வஸத்ஸு கிம் தேஹச்சண்டவாதேன தார்யதே ।। 101*

மந்த்ரிகள் பலர் இருந்தாலும் அரசனில்லா ராஜ்யம் வாழாது. அங்காவயவங்கள் இருந்தாலும் ப்ராணன் இல்லாமல் தேஹம் இருக்குமா?

*மாது:கிஞ்சித் பிது:கிஞ்சிதாசார்யாத் கிஞ்சிதாப்யதே*
*ஸம்யக் வினீதஸாஸ்த்ரேஷு ஸர்வம் ராஞ்யஸ்து லப்யதே ।। 102*

தாய் தந்தை ஆசார்யன் இவர்களிடமிருந்து அரசன் கல்வி பெற்றாலும் மதி நுட்பம் வாய்ந்த மந்த்ரிகளிடமிருந்து தான் கல்வியைப் பெறுகிறான்.

*சலந்தி ஸர்வமர்யாதாச்சலிதே ஸதி பார்திவே*
*பர்வதா அபி கம்பந்தே ப்ரஸக்தே கம்பனே புவ: 103*

பூகம்பம் வந்தால் பர்வதங்களும் சாயும், அதுபோல் அரசன் நிலை குலைந்தால் அனைத்தும் நிலைகுலையும்.

*பத்ன்யா மாங்கல்யயோகேன பத்ய்ராயு; ப்ரவர்ததே*
*ப்ரக்ருதீனாம் பாக்யேன பார்திவ: ஸுகமேததே ।। 104*

பத்னியின் மாங்கல்ய பலத்தால் பதியின் ஆயுள் வளரும். அது போல் குடிகளின் பாக்யத்தால் அரசன் ஸுகத்தை அடைகிறான்.

*நிர்மிதம் சதகம் ஸாக்ரம் நீலகண்டேன யஜ்வனா*
*ஸபாரஞ்சனமேதேன ஸாதயந்து மனீஷிண: ।। 105*

நீலகண்ட யஜ்வாவால் செய்யப்பட்ட ஸபாரஞ்சனம் என்னும் சதக நூல் பண்டிதர்களை நன்றாக மகிழ்விக்கட்டும். முற்றிற்று.

# ருத்ர கீதை

*சின்னவன்*

ஸ்வதர்மனிஷ்ட: சதஜன்மபி: விரிஞ்சிதாமேதி தத:பரம் ஹி மாம்
அவ்யாக்ருதம் பாகவதோ அத வைஷ்ணவம் பதம் யதாஹம் விபுதா:
கலாத்யயே ॥ 6

*தன் கடமைகளை செய்யும் மனிதன் 100 ஜன்மாக்களில் ப்ரம்ம தேவனை அடைகிறான். பின்பு என்னை அடைகிறான். பின்பு என்னைப் போலவும் தேவர்களைப் போலவும் அவரவர் அதிகார காலத்தில் அவ்யாக்ருதமான விஷ்ணு ஸாயுஜ்யத்தை அடைகிறான்.*

அத பாகவதா யூயம் ப்ரியா:ஸ்த பகவான் ததா
ந மத்பாகவதானாம் ச ப்ரேயா அன்யோஸ்தி கர்ஹிசித் ॥ 7

*எனவே பகவத்பக்தர்களான நீங்கள் பகவானைப் போலவே வேண்டியவராகிறீர்கள். பக்தர்களாகிய உமக்கு என்னைத் தவிர வேறு பிரியமானவன் ஒருபொழுதும் கிடையாது.*

இதம் விவிக்தம் ஜப்தவ்யம் பவித்ரம் மங்கலம் பரம்
நிச்ஸ்ரேயஸ்கரம் சாபி ஸ்ரூயதாம் தத்வதாமி வ: ॥ 8

*தனிமையில் ஜபிக்க வேண்டியதும் மங்களமானதும் பவித்ரமானதும் வீடுபேற்றைக் கொடுக்க கூடியதுமான துதியை உங்களுக்குக் கூறுகிறேன். கேளுங்கள்.*

நம ஊர்ஜம் இஷே த்ர்ய்யா: பதயே யஞ்யரேதஸே
த்ருப்திதாய ச ஜீவானாம் நம: ஸர்வறஸாத்மனே ॥

*பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் உரிய அன்னவடிவமாகவும் முவ்வேதங்களுக்குத் தலைவனும், ஸோமரஸரூபனும், ஜீவராசிகளுக்கு த்ருப்தி அளிப்பவரும் ஜலஸ்வரூபியுமான பகவானுக்கு நமஸ்காரங்கள்.*

ஸர்வஸத்வாத்மதேஹாய விசேஷாய ஸ்தவீயஸே
நமஸ்த்ரைலோகபாலாய ஸஹ ஓஜோபலாய ச ॥

*எல்லா ப்ராணிகளின் தேஹவடிவானவரும், ப்ருத்வீ ரூபமானவரும் மூவுலகை காப்பவரும், ஓஜஸ் பலம் உடையவருமான பகவானுக்கு நமஸ்காரம்.*

அர்தலிங்காய நபஸே நமோந்தர்பஹிராத்மனே
நம;புண்யாய லோகாய அமுஷ்மை பூரிவர்சஸே ॥

சப்ததினால் ஊகித்து அறியக்கூடிய ஆகாயரூபியும், உள்ளும் புறமும் வ்யாபித்திருப்பவனும், புண்யலோகரூபியும், இவ்வுலக ரூபியும், ஸகல ஜீவஸ்வரூபியுமான தங்களுக்கு நமஸ்காரம்.

ப்ரவ்ருத்தாய நிவ்ருத்தாய பித்ருதேவாய கர்மணே
நமோ அதர்மவிபாகாய ம்ருத்யவே துக்கதாய ச ॥

ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஸ்வரூபனும், பித்ருதேவனும், வைராக்யத்தின் பலஸ்வரூபியும், துயரளிக்கும் ம்ருத்யு வடிவனுமான பகவானுக்கு நமஸ்காரம்.

நமஸ்தே ஆசிஷாமீச மனவே காரணாத்மனே
நமோ தர்மாய ப்ருஹதே க்ருஷ்ணாயாகுண்டமேதஸே
புருஷாய புராணாய ஸாங்க்யயோகேஸ்வராய ச ॥

எல்லாவிதமான காமங்களுக்கும் பலன் அளிப்பவரும், தர்மஸ்வரூபியும், கருமை நிறத்தை உடையவரும், முன்னைக்கு முன்னம் பரம் பொருளும், தடையற்ற அறிவு உள்ளவரும், ஞ்யானம் யோகம் இவைகளுக்குத் தலைவனுமான தங்களுக்கு நமஸ்காரம்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:


## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**த்வத்பாதுகா னுஸந்தானப்ராப்தஸர்வாத்மதத்ருசி**
**பூர்ணாஹம்க்ருதிமத்யஸ்மின் ந கர்ம லிப்யதே நரே ॥ 81**

*உனது பாதுகையை த்யானம் செய்து எல்லாம் ஆத்ம ஸ்வரூபம் என்று பார்ப்பவராயும் பூர்ணமான த்மஸ்வரூபமயுள்ளவனிடம் காமம் ஒட்டாது.*

**தவானுக்ரஹ ணிர்பின்ன ஹ்ருதயக்ரந்திரத்ரிஜே**
**ஸ்வாத்மவத்வேன ஜகன் மத்வா ததோ ந விஜுகுப்ஸதே ॥ 82**

*பர்வதகுமாரி உனது அருளால் இதய முடிச்சுகள் அவிழ்ந்து உலகையெல்லாம் தானாக உணர்பவன் எதையும் வெறுக்கமாட்டான்.*

**கதா வஸுதலோபேதே த்ரிகோண நவகான்விதே**
**ஆவஹயாமி சக்ரே த்வாம் ஸூர்யாபாம் ஶ்ரீயமைஸ்வரீம் ॥ 83**

*எட்டிதளம் த்ரிகோணம் நவகோணம் உள்ளதான ஶ்ரீசக்ரத்தில் ஸூர்யன் போன்ற ஶ்ரீரூபமான ஈஸ்வரியை ஆவாஹனம் செய்கிறேன்.*

**ஹ்ரீமித்யேகம் தாவகம் வாசகார்ணம் ய்ஜ்ஜிஹ்வாக்ரே தேவி ஜாகர்தி கிஞ்சித்**
**கோவாயம் ஸ்யாத் காமகாமஸ்த்ரிலோக்யாம் ஸர்வேஸ்மை**
**தேவா பலிமாஹவந்தி ॥ 84**

*ஹ்ரீம் எனும் ஒரு மந்த்ர எழுத்து எவர் நாக்கு நுனியில் கொஞ்சம் இருக்கிறதோ அவன் எப்படி ஆவான்? அவன் ஆசை வைத்தால் மூவுலகில் ஸகல தேவர்களும் பலி செலுத்துவர்.*

**நாகஸ்த்ரீணாம் கின்னரீணாம் ந்ருபாணாம் அத்யாகர்ஷீ சேதஸா சிந்தனீயம்**
**தவத்பாணிஸ்தம் கும்குமாபம் சிவே யம் த்விஷ்மஸ்தஸ்மின்**
**ப்ரதிமுஞ்சாமி பாசம் ॥ 85**

*சிவே தேவஸ்த்ரீகள் கின்னரஸ்த்ரீகள் அரசர் ஆகியவர்களை ஆகர்ஷிப்பதும் மனதால் த்யானம் செய்யத்தக்கதும் உனது கையில் இருப்பதும் கும்குமம் போன்றதுமான பாசத்தை என் த்வேஷியிடம் விடுகிறேன். (என் விரோதியை உன் பாசம் கட்டட்டும் என்று பொருள்).*

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

இதுவரை வேத இதிஹாஸ புராணங்கள் பற்றி விரிவாக பார்த்தோம். இனி தத்வ விசாரத்தில் ரிஷிகள் அருளிய விஷயங்களைப் பார்ப்போம்.

சிறைபட்ட ஆத்மா நம் உடம்புக்குள் சிறைப்பட்டுள்ளது சத்சித் ஆனந்த சொரூபத்துக்கு வாரிசான ஆத்மா. பிள்ளை பிராயத்தில் வனவேடர் கூட்டத்தில் வழி தவறி சேர்ந்துதானும் வேடன்தான் எனும் மாயையில் சிக்கித் தன் பித்ரார்ஜிதத்தை அறியாத அவித்யையுடைய ராஜ குமாரனை ராஜ புரோகிதர் தேடி வந்து அப்பா நீ வேடனல்ல ராஜகுமாரன் என்றவுடன் தன் நிலையை உணர்ந்த அவன் வேடர் கூட்டத்திற்கு தலை முழுகி தன் சுயராஜ்ய சொரூபத்தை அடைகிறான். இந்த ஆத்மிக சுதந்த்ரத்தை பல ரிஷிகள் பல கோணங்களில் தத்வ ஆராய்ச்சி செய்து நூல்களை அருளினர். அதில் தலையாயது பாதராயணர் எனும் வ்யாஸர் அருளிய ‘‘ப்ரம்மஸூத்ரம்’’

**‘‘குடம்பை தனித்தொழிய புட்புறந்தற்றே**
**உடம்பொடு உயிரிடை நட்பு’’**

முட்டையிலிருந்து பறவை பிரிந்து போவது போல், இவ்வுடம்பிலிருந்து ஜீவாத்மா வெளியேறுகிறான். அவன் எங்கிருந்து நுழைந்தான் இதை விட்ட பின் பிறகு எங்கு போகிறான் என்பதை விவரிப்பது தான் ஷட்தர்சனங்கள்.

ஷட் தர்சனங்கள் ஜீவன், பரமாத்மா, ஜகத் இம் மூன்றும் என்ன, இவைகளின் ஆரம்பம் என்ன ஸம்பந்தம் என்ன என்பது பற்றி ஆறு ஆசார்யர்கள் விரிவாக அலசி ஆராய்ந்து தர்சனன்களாக அருளினர்.

அவற்றிற்கு ஸூத்ரம் என்று பெயர். அவற்றை எழுதினவரின் பெயரிலேயே வழங்கபடுகின்றன. கௌதமரின் ந்யாய ஸூத்ரம் கணாதரின் வைசேஷிக ஸூத்ரம் கபிலரின் ஸாங்க்ய ஸூத்ரம் பதஞ்சலியின் யோக ஸூத்ரம் ஜைமினியின் பூர்வமீமாம்ஸா ஸூத்ரம் பாதராயணரின் உத்ரமீமாம்ஸா எனும் பெயர் கொண்டவை. ஜைமினியின் ஸூத்ரங்கள் கர்ம காண்டத்தையும், பாதராயணரின் ஸூத்ரங்கள் வேதாந்த ஸூத்ரம் என்று அழைக்கப்படும். இதற்கு ப்ரம்மஸூத்ரம் என்றும் சாரீரக மீமாம்ஸ ஸூத்ரம் என்றும் பெயருண்டு.

# ப்ரம்மஸூத்ரம்

ப்ரமத்தை விளக்குவதால் ப்ரம்மஸூத்ரம் என்று பெயர். இதில் நான்கு அத்யாயங்கள், பதினாறு பாதங்கள், நூற்றுத்தொண்ணூத்திரண்டு அதிகரணங்கள் ஐனூற்று ஐமபத்தைந்து ஸூத்ரங்கள் உள்ளன. இதை ஞானகாண்டம் என்று அழைப்பர். இறுதி குறிக்கோளைப் பற்றி கூறுவதால் வேதாந்தஸூத்ரம். ப்ரம்மத்தை பற்றி கூறுவதால் ப்ரம்ம சூத்ரம். சரீர பந்தத்தில் அகப்பட்ட ஆன்மாவை விளக்குவதால் சாரீரக ஸூத்ரம். ஸூத்ரம் எனப்படுவது ஸாரமான பொருளை இரண்டு மூன்று சொற்களால் ஸூசிப்பது. உரை ஆசிரியர்கள் இல்லாமல் பொருள் அறிய முடியாது. எனவே இதற்கு ஸ்ரீசங்கரர், ராமானுஜர், மத்வர், கேசவர், நீலகண்டர், வல்லபர், நிம்பார்கர், விஞ்யானபிக்ஷு போன்றவர்கள் உரை எழுதியுள்ளனர்.

பாஷ்யம் எனும் பெயரால் இவை வழங்கப்படுகின்றன. இவைகளை ஆங்கிலத்தில் வெளியிட்ட பெருமை டாக்டர் ராதாக்ருஷ்ணனை சாரும்,

## வேத சப்த ப்ரஹ்ம மயம் ஜகத்

***த்ருதராஷ்ட்ரரின் கேள்வி :*** *மௌனத்தின் உண்மையான குணங்களை எனக்கு சொல்லுங்கள். கற்றறிந்த ஒருவர் மௌனத்தினால் மட்டும் சாந்தத்தையும் மோக்ஷத்தையும் அடைந்திட முடியுமா? என்று சொல்லுங்கள் என்று ராஜா த்ருதராஷ்ட்ரன் ஸ்ரேக்ஷ்டரான ஸனத் ஸுஜாதரை வினவுகிறார்.*

***ஸனத் ஸுஜாதரின் பதில் :*** *''யதோ ந வேதா மனஸா ஸஹைந மநுப்ரவிஸ்யந்தி ததோஅத மௌனம்'' - ''வேதங்களால் மனஸுடன் அந்த ப்ரஹ்மத்தில் ப்ரவேசிக்க முடிவதில்லை. வேதங்கள் மனதுடன் அந்த ப்ரஹ்மத்தில் ப்ரவேசிக்க முடியாது என்னும் காரணத்தினால் அது மௌனம். ஆகவே ப்ரஹ்மம் தான் மௌனம். ஓம் என்பது ப்ரணவம். அதுவே வேத சப்தம். ப்ரஹ்மத்திலிருந்து தான் உண்டாயிற்று. ஓம் வேதங்களின் சாரமாகும். அரசனே! யாரிடமிருந்து வேத சப்தங்கள் உண்டாயிற்றோ அந்த வேத சப்தத்தினால் சொல்லத் தக்கவராய் அவரே இருக்கிறார். அந்த ப்ரஹ்மம் ஸ்யோதிர் மயமானது'' என்று ஸனத் ஸுஜாதர் பதிலளிக்கிறார்.*

*--ஸநத் ஸுஜாதீயம்*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

ஏவம் ஸர்வே மஹாத்மான: பாண்டவா மனுஜோத்தமா;
பரராஷ்ட்ராணி நிர்ஜித்ய ஸ்வராஷ்ட்ரம் வவ்ருது: புரா ॥

*உத்தமமான பாண்டவர்கள் இப்படி பிற நாடுகளை வென்று தம் நாடுகளை வளத்தனர்.*

ததோ பலமதிக்யாதம் விஞ்யாய த்ருடதன்வினாம்
தூஷிதஸஹஸாபாவோ த்ருத்ராஷ்ட்ரஸ்ய பாண்டுஷு
ஸ சிந்தாபரோ ராஜா ந நித்ராமலபன் நிசி ॥

*பாண்டவர்களின் ஜயகோஷத்தைக் கேட்ட அரசன் அவர்களின் மீது திடீரென்று வெறுப்பைக் கொண்டான். கவலை கொண்ட அவனுக்கு நித்ரை வரவில்லை.*

குணைஸ்சமுதிதான் த்ருஷ்ட்வா பௌரா: பாண்டுஸ்ஸுதான் ததா
கதயந்தி ஸ்ம ஸம்பூய சத்வரேஷு ச ஸபாஸு ச ॥

*பாண்டவர்களின் குணங்களையும், ஜயத்தையும் பார்த்த மக்கள் ஸபைகளிலும் நாற்சந்திகளிலும் கூடிப் பேசினர்.*

ப்ரஞ்யாசக்ஷுரக்ஷு ஷ்டவாத் ஸ கதம் ந்ருபதிர்பவேத்
ததா ஸாந்தனவோ பீஷ்மஸ்ஸத்யஸந்தோ மஹாவ்ரத:
ப்ரத்யாக்யாய புரா ராஜ்யம் ந ஸ ஜாது க்ரஹீஷ்யதி ॥

*கண்ணில்லாதவன் அரசன் எப்படி அரசாள்வான்? பீஷ்மரோ ஸத்யஸந்தர். நாட்டை ஆள மறுத்தவர் எப்படி இப்போது ஒத்துக்கொள்வார்?*

தே வயம் பாண்டவ ஜ்யேஷ்டம் தருணம் வ்ருத்தசீலினம்
அபிஷிஞ்சாம ஸாத்வத்ய ஸத்யகாருண்யவேதினம் ॥

*இளமையுள்ளவனும், ஸத்யனும், கருணை உடையவனும் பாண்டவர்களின் மூத்தவனை ராஜாவாக அபிஷேகம் செய்வோம்.*

தேஷாம் துர்யோதனச் ஸ்ருத்வா தானி வாக்யானி ஜல்பதாம்
ததோ விரஹிதம் த்ருஷ்ட்வா பிதரம் ப்ரதிபூஜ்ய ஸ:
பௌரானுராகஸந்தப்த: பச்சாதிதமபாஷத ।।

*மக்களின் இப்பேச்சினால் கொதித்துப் போன துர்யோதனன் தந்தையிடம் தனிமையில் கூறினான்.*

ஸ்ருதாமே ஜல்பதாம் தாத பௌராணாம் அசிவா கிர :
த்வமன்னதுத்ய பீஷ்மம் ச பதிமிச்சந்தி பாண்டவம் ।।

*தந்தையே உம்மையும் பீஷ்மரையும் த்ள்ளிவிட்டு மக்கள் பாண்டவனை மன்னனாக்க விழைகின்றனர்.*

மதமேச்ச பீஷ்மஸ்ய ந ஸ ராஜ்யம் புபுக்ஷதி
அஸ்மாகம் து பராம் பீடாம் சிகீர்ஷந்தி புரே ஜனா: ।।

*பீஷ்மரும் இவ்வரசை விரும்பாதிருக்க மக்களின் இந்த விபரீத ஆசை நமக்கு பெரும் பீடையை உண்டாக்கும்.*

பித்ருத:ப்ராப்தவான் ராஜ்யம் பாண்டுடாத்மகுணை; புரா
ஸ ஏஷ பாண்டோர் தாயாத்யம் யதி ப்ராப்னோதி பாண்டவ:
அவஞ்யாதா பவிஷ்யாம: பரபிண்டோபஜீவின:
ந பவேம யதா ராஜன் ததா நீதிர்விதீயதாம் ।।

*முன்பு தன் நற்குணங்களால் பாண்டு அரசாட்சியை அடைந்தார். அதேபோல் இந்த யுதிஷ்ட்ரனும் அரசாட்சியை அடைந்தால் நமக்கு அது அவமானம். அவருடைய கருணையில் நாம் வாழா திருக்க ஓர் உபாயம் சொல்லும்.*

யதி த்வம் புரா ராஜன்னிதம் ராஜ்யமவாப்தவான்
த்ருவம் ப்ராப்ஸ்யாம ச வயம் ராஜ்யமப்யவசே ஜனே ।।

*மக்கள் நம் வசமில்லையெனினும் நீங்கள் ராஜயத்தை எப்படி அடைந்தீரோ அப்படியே நாமும் அடைவோம்.*

த்ருத்ராஷ்ட்ரஸ்து ஸன்சித்ய துர்யோதனமதாப்ரவீத்

*சிறிது யோசனை செய்துவிட்டு தந்தை துர்யோதனிடம் கூறினான்.*

உ

# ஸனாதன தர்மம் ப்ரமாண நூல்கள்

## ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

இப்போதைய ஸ்திதி என்ன? உங்கள் வித்யயை என்ன? ப்ரமாண நூல் எது என்று கேட்டால் சொல்லத் தெரியாதது மட்டுமில்லை. வித்யை என்றாலே என்ன வென்று தெரியவில்லை. செப்படி வித்தை மாந்த்ரீகம் என்று நினைத்துக்கோண்டிருக்கிறோம். ''

தெய்வத்தின் குரல் இரண்டாம் பாகம் 208ஆம் பக்கம்)

பெரியவாளின் ஆணைப்படி ப்ரமாண நூல்களைப்பற்றி ஸ்ரீ ஸோமதேவ சர்மா எழுதிய கட்டுரையை வெளியிடுகிறோம்.

நாம் வசிக்கும் த்வீபத்திற்கு ஜம்பூத்வீபம் என்று பெயர். இது எல்லாதேவர்களாலும் கர்ம பூமி என்று கொண்டாடப்படுகிறது. இதில் புண்ய நூல்களும் பகவதவாதாரங்களும், பாவனமான நதிகளும், உத்தமமான க்ஷேத்ரங்களும் உண்டு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு மதம் தோன்றியது. எல்லாரும் நலம் விழைய விரும்பியது. இதை ஆர்ய மதம் என்றழைத்தனர். இதற்குரிய பாஷையிலிருந்து மற்ற பாஷைகள் தோன்றின என்பர். உயர்ந்த நாகரிகத்தை பின்பற்றிய இம்மதம் ஸானாதன தர்மம், இந்து மதம், ஆர்ய மதம் என்று அழைக்கப்பட்டது. இம்மத்தின் க்ரந்தங்கள் பல வேறாக இருப்பினும் ஒரே கடவுளைப்பற்றிக் கூறுகின்றன. அவைகள் நேராகவோ மறைமுகமாகவோ வேதத்தின் கருத்தையே சொல்கின்றன. இவை அங்கங்கள் என்றழைக்கப்பட்டன. உடலுக்கு அங்கங்கள் எப்படியோ வேதத்திற்கும் ஸாதனாமாயின. வேதம் ஒன்றேயாயினும் சில காரணங்களால் நாங்காகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வேதங்கள் 4 வேதாங்கங்கள் 6 உபாங்கங்கள் 4 ஆக 14 வித்யைகள் என்றும் உபவேதங்கள் 4 ஐச் சேர்த்தால் 18 வித்யைகள் என்று கூறுவார்கள். அவைகளிலிருந்து வரும் வெவ்வேறான மதங்களும் ஆஸ்தீக மதம் என்றழைக்கப்படும். இந்த 14 வித்யைகளே நம் கல்விக்கு ஆதாரமானவை. நாஸ்திக மதங்களான பௌத்தம், சமணம் கூட இவைகளை ஏற்றுக் கொண்டுள்ளன. வேதத்தை ப்ரமாணமாக்கொள்ளாத மதங்களை அவைதிக மதங்கள் என்பர். அதிலும் மாத்யமிக, யோகாசார, ஸௌத்ராந்திக, வைபாசிக, சார்வாக திகம்பர எனும் பிரிவுகள் உண்டு.

# வேதம்

வேதம் அறிவை அளிக்கும் நூல். அதை ஸ்ருதி என்பர். அதை காதினால் கேட்டு கெட்டு உபதேசமாகப் பரவினதால் அப்பெயரே ஏற்குமென்பர். அவ்வேதம் சில ஆண்டுகளுக்கு முன் ரிஷிகளால் எழுதப்பட்டது என்று மேனாட்டார் கூறுவர். ஆனால் வேதபாஷ்யம் எழுதியவர் வேதம் நித்யம், அனந்தம் , ஈசன் முகத்திலிருந்து வந்தது, அதை மகரிஷிகள் தபோபலத்தினால் லோகோபகாரமாக வெளியிட்டனர் என்றே நிச்சயித்துள்ளனர். வேதவ்யாஸர் அதை ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம் என்று நான்காகப் பிரித்தார்.

வேதத்தில் பெரும்பாலும் யாகம் பற்றியதே. அதைச் செய்ய பல ரித்விக்குகள் வேண்டும். யாகம் செய்யும் யஜமானன், ப்ரம்மா, அத்வர்யு உத்காதா ஆகியவர்கள் ப்ரதானமானவர்கள். அந்தந்த தேவதைக்குரிய மந்த்ரங்களைக் கூறி அவரவர் குணத்தை வெளியிடும் ஹோதாவுக்கு வேண்டிய மந்த்ர்களை உடைய ருக்வேதத்தை ''ஹோத்ருப்ரயோகம்'' என்பர். எல்லாத் தொழில்களையும் யஜமானனுக்காகச் செய்யும் அத்வர்யுக்கு வேண்டியவைகள் யஜுர் வேதத்தில் உள்ளன. அந்தந்த தேவதையைக் கானம் செய்து மகிழ்விக்க வேண்டியவை ஸாமவேத்தில் உள்ளன. ஸம்பத் உண்டாகவும் எதிரி அழிவுக்கும், சாந்திக்கும் உண்டானவை அதர்வணத்தில் உள்ளன. நான்கு வேதங்களும், தர்ம, அர்த, காம மோக்ஷத்தை அளிப்பன பொதுவாக தர்மகாண்டம் ப்ரம்ம காண்டம் என இருவகைப்படும். தர்மார்த காமத்தை அளிப்பதால் கர்ம காண்டத்தை தர்ம காண்டமென்றும், மோக்ஷத்தை காட்டுவதால் ப்ரம்மக்காண்டம் என்பர். கர்மகாண்ட மந்த்ரம் மன்த்ரம் ப்ராம்மணம் என இருவகைப்படும்.

அனுஷ்டானத்துக்குரிய த்ரவ்யம் தேவதை இவைகளை விளக்குவது மந்த்ரம். அமந்த்ரம் பாதங்களோடு காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகளுடன் சேர்ந்திருந்தால் ருக் மந்த்ரம் என்றும் கானத்தோடு சேர்ந்திருந்தால் ஸாமன் எனவும் எதுவும் சேராதிருந்தால் யஜுஸ் எனப்படும். ப்ராம்மணம் விதி அர்தவாதம் எனப்படும். அவ்விதி பலவகைப்படினும் ஒரு கர்மாவை விதிப்பதே தாத்பர்யம். விதித்த கர்மாவை துதிப்பது, வேண்டாதவற்றை நிந்திப்பது அர்தவாதம். இவைபற்றி ஜைமினி, ப்ரபாகரர், பாட்டர் போன்ற மகரிஷிகள் எழுதியுள்ளனர். அதற்கு பூர்வமீமாம்ஸை என்று பெயர். ப்ரம்மகாண்டம் பற்றி பாதராயணர் தந்தருளிய சாஸ்த்ரத்துக்கு உத்தரமீமாம்ஸை எனப் பெயர். இதற்கு ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமனுஜர் போன்றோர் பாஷ்யம் அருளியுள்ளனர்

# திருமந்திரமும் அத்வைதமும்



சைவசித்தாந்த நூல்களிலே முக்கியமானதாகத் திருமந்திரம் கொண்டாடப் பெற்றாலும், ஏனைய அனுபவ நூல்களிலே போல இதனுள்ளும் வேதாந்தமும் வேதாந்திகளின் பெருமையும், அத்வைதவுண்மைகளும் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன. தொடக்கத்தில், தாம் திருவவதாரஞ் செய்ததின் கருத்தைக் கூறுவர்.

***என்னை நன்றாக இறைவன் படைத்தனன்***
***தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே (81)***

பிரும்ம சொரூபத்தையும், ஈசுவர சொரூபத்தையும் தமிழிலே விளக்க வந்த இவர், முதலிலே பேதங் கூறுவோரை விளக்குகிறார்.

***ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்***
***ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்***
***சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனரார்***
***பேததித் நூலகம் பிணங்குகின் றார்களே (104)***

உலகங்களையெல்லாம் ஆக்கிக் காத்து அழிப்பான் ஒருவனே என்று வற்புறுத்துகிறார்.

***ஒருவனு மேஉல கேழும் படைத்தான்***
***ஒருவனு மேஉல கேழும் அளித்தான்***
***ஒருவனு மேஉல கேழும் அளித்தான்***
***ஒருவனு மேஉல கோடுயிர் தானே (404)***

''இப்படிப் படைத்தவனே அப்படைக்கப்பட்ட உலகமும் உயிரும்'' என்பதை அவ்வொரு வஸ்துவே உள்ளது; அதுவே இதெல்லா மாயிற்று என்னும் அத்வைதவுண்மையை, இப்பாடலின் சிகரத்தில் வைத்துக் கூறுகிறார். இவ்வுண்மையை அதாவது, பிரும்மம் தானே எல்லாமாய் விரிந்தது என்பதைப் பல பாடல்களில் விரித்துரை செய்கிறார்.

**தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்**
**தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்குந்**
**தானே கடல்மலை யாதியு மாய்நிற்குந்**
**தானே உலகில் தலைவனு மாமே** **(412)**

*திக்குகள், தேவர்கள் முதலிய உயிர்கள் அவர்களுடைய உடல்கள், கடல், மலை முதலிய உயிரற்ற பொருள் ஆகிய எல்லாமும் அந்த ஈசுவரனே ஆயினும் அவர்களுக்கும், அவற்றிற்கும் அவனே தலைவனாய்த் தனித்து நிற்கிறான் என்கிறார். மீண்டும் அவர்,*

**மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்**
**உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே**
**கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா**
**அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே** **(440)**

*என்று ''மண் ஒன்றே உண்மைப் பொருள்; பல பாண்டங்ககளாய் உருவும் பேரும் பெற்றும் தோன்றுவது அம்மண்ணே'' என்ற உவமானத்தால், அத்வைத உண்மையாகிய முதற்காரணத் தன்மையை விளக்குகிறார்; ஆனால் அந்த ஒன்றேயான பொருளை நாம் ஏன் காண்பதில்லை என்பதை விளக்குகிறார்; நாம் யார்? பலவாகக் காணும் தோற்றங்களே; கண் வெளித்தோற்றங்களைக் காணும்; ஆயினும், அது தன்னையே கண்டு கொள்ள முடியாது; அதுபோல, ஈசுவரனாகிய உலகமும் ஈசவனைக் காண முடியாது; தன்னைக் காட்டிலும் வேறான வஸ்துவைத் தானே கண் காண முடியும். கண் கண்ணையே காண முடியுமா? அதுபோலவே, அண்ணலும், தானேயாகிய உலகோராற் காண இயலாத தன்மையுடையவன். இதை மீண்டும் வற்புறுத்துகிறார். கீழ்வரும் பாட்டிலே:*

**அவனும் அவனும் அவனை யறியார்**
**அவனை யறியில் அறிவானும் இல்லை**
**அவனும் அவனும் அவனை யறியில்**
**அவனும் அவனும் அவனிவ னாமே** **(1789)**

*எவ்வளவு உயர்ந்த சீவனாயினும், பிரும்மத்தை அறிந்து கொள்ள மாட்டார்கள். அவனை அறிவதற்கு யத்தனித்தால் அவனை அறிவானும், அறிபொருளும் அறிவுமானபடியால் அறிவான், அறிபொருள், அறிவு என்ற முப்பொருளும் இல்லையாய் விடும்; அப்பொழுது அறிவும் இல்லை, அறிவானும் இல்லையன்றோ?*

அறிவுமயமான பிரும்மமே எஞ்சி நிற்பதாகும். ஆகவே, பிரும்மத்தை விசாரித்து அறியப் புகுந்தான், அவனும், அவனும் என்று பிரித்துக் கூறப்படுகின்ற உலகோர் அனைவரும் அவனேயான இவன் அதாவது சிவனேயான ஈசுவரனேயாம் என்று தெளிவாகக் கூறி அத்வைதத்தை நிலை நாட்டுகிறார்.

இந்த ஞான நிலையை எய்தி சிவன் முத்தனாயிருக்கும் சில ஞானியே அத்வைத வுண்மைக்கு நிதர்சனம் என்கிறார்.

**எங்குஞ் சிவமா யருளா மிதயத்துத்**
**தங்குஞ் சிவஞானிக் கெங்குமார் நற்பரம்** ***(1909)***

அந்தந்தப் பொருளுள் நின்று அவற்றையெல்லாம் தன் மயமாகும்படி அவற்றுள் தோய்ந்துள்ள ஈசனே இங்கே இந்த ஞானியின் உடலுள் சீவனாயிராமல் எங்குமாய் நிற்கும் ஈசனேயாகிறான்.

**அங்காங் கௌநின்று சகமுண்ட வான்தோய்தல்**
**இங்கேக யிறந்தெங்கு மாய்நிற்கும் ஈசனே** ***(1909)***

'தனித்து நிற்பதால் தான் என்னப்படும் பிரும்மமே உலகமாக விரிந்ததை வெளிப்படுத்திக் காட்டும் முச்சுடராகி, உலகத்தைத் தோற்றுவித்த அயனாகவும் தாபிக்கும் மாலாகவும் தனித்து நின்று, உடல் வேறு பொருள் உயிர் வேறு பொருள் என்னாதபடி எல்லாமுமாகி நிற்கிறான்; ஞானமாகிய ஒளியும் அஞ்ஞானமாகிய இருளும் அவனேயாம்'' என்கிறார் கீழ்ப் பாட்டிலே:

**தானே விரிசுடர் மூன்றுமொன் றாய்நிற்குந்**
**தானே யயன்மா லௌநின்று தாபிக்குந்**
**தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்**
**தானே வெளியொளி தானிருட்டாமே** ***(2003)***

இவ்வாறு தோன்றுகின்ற உயிர்கள் உண்மையோ தோற்றமோ என்றால், தோற்றமே என்கிறார்.

**கடங்கடந் தோன்றுங் கதிரவன் தோன்றில்**
**அடங்கிட மூடில் அவற்றில் அடங்காள்**
**விடங்கொண்ட கண்டனு மேவியகாயத்**
**தடங்கிட நின்றதும் அப்பரி சாமே** ***(2002)***

கதிரவனது ஒளி ஒவ்வொரு கடத்தினுள்ளும் காணப்படுகின்றது. அதற்குள் காணப்படும் ஒளியை வேறு பிரித்து அதனுள்ளே அடங்கியிருக்க வேண்டும் என்று அந்தக் கடத்திற்கு மூடியிட்டு விட்டால், அவ்வாறு அதனுள் மட்டுமே அடங்கி விடுமோ அக் கதிரவனது ஒளி? அதுபோலவே, ஈசனை ஒருடலிலே மட்டும் அடங்கும்படி செய்ய இயலாது. அவனை ஓரிடத்தில் மட்டும் உள்ளவனாக மூடியிட்டுக் கொள்வதால் அவ்விடத்திலே அவன் காணப்படாது போவன்; எங்கும் வியாபித்துள்ளவனாக மூடி விடாமற் கொண்டால் எவ்விடத்திலும் காணப்படுவான் என்று உவமையை விரித்துக் கூறி உண்மையை விளக்குகிறார். ஆதலின், சீவனும், சிவனும் ஒன்றே என்கிறார்.

**சீவ னெனச்சிவ னென்னவே றில்லை**
**சீவ னார்சிவ னாரை யறிகிலர்**
**சீவ னார்சிவ னாரை யறிந்தபின்**
**சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே** **(2017)**

என்ற பாடலின் சீவனைச் சிவனென்றும்,

**அறிவாய் அறியாமை நீங்கி யவனே**
**பொறிவாய் ஒழிந்தெங்குந் தானான போதன்**
**அறிவாய் வற்றினுட் டான யறிவன்**
**செறிவாகி நின்ற அச்சீவனு மாகுமே** **(2019)**

என்ற பாடலில் சிவனையே சீவனென்றும் கூறுவதால், சீவேசுர அபேதத்தை நிலை நாட்டுகிறார். அறிவாகி, அறியாமை நீங்கிய சிவபெருமானே, பொறிவாய் ஐந்தும் இல்லாதவனே எங்கும் தானாக விரிந்தும் அறிவு மயமேயாகிய சீவகோடிகளில் அறிவனான தன் தன்மை மாறாதவனாய் அவ்வவ் வுடல்களிலெல்லாம் செறிந்து நிற்கும் சீவர்களாகத் தோன்றுகிறான். சீவர்கள் ஆதியில் சிவனினும் வேறுபட்டவர்களாயிருந்து சிவனருளால் சிவனோடு ஒன்றுபவர் அல்லர்; சிவனே அச்சீவர்கள் அனைத்துமாகி அவற்றுள் அறிவாய் விளங்கிச் சிவனாகவே இருக்கிறான் என்னும் அத்வைத வுண்மை இப்பாடலிலும் நன்கு விளக்கப் பெற்றுள்ளது.

'முப்பத்தாறு தத்துவங்களாக வகுப்பட்டவை. அனைத்தும் அறிவில்லாத சடப்பொருளே அவற்றின் வேறான பிரும்ம தத்துவமே சீவன்; இவ்வுண்மையை நந்தியாகிய குருவின் உபதேசத்தாலே உணர்ந்தேன்'' என்கிறார் வேறொரு பாடலிலே

**அறிவொன் றிலாதன ஐயேழு மொன்றும்**
**அறிகின்ற என்னை அறியா திருந்தேன்**
**அறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி**
**அறிகின்ற நானென் றறிந்து கொண்டேனே** (2181)

குருவருளாலே என்ன விளங்கிற்று என்று விளக்குகிறார். மற்றொரு பாடலிலே

**மாயா வுபாதி வசத்தாருஞ் சேதனத்**
**தாய குருவருளாலே யதில் தூண்ட**
**ஓயும் உபாதியோ டொன்றினென் றாதுயிர்**
**ஆய துரியம் புகுந்தறி வாகவே** (2014)

*'சேதனத்தாய உயிர்கள் மாயாவுபாதியின் வசத்தவையாம் சேதனம் குருவருளாலே தூண்டப்பெற்றால் உபாதி ஓய்ந்துவிடும்; உபாதியோடு ஒன்றி யிருக்கும் வரை உயிர்கள் சிவனோடு ஒன்ற மாட்டா; உபாதி ஓய்ந்தபின் பலவாகத் தோன்றிய உயிர் துரிய நிலையுற்று அறிவாகவே விளங்கும்'' என்பது இப்பாடலின் பொருள்.*

*'சற்குரு பிரும்மமாகவே விளங்குவான்; அவனுடைய முன்னிலையில் எல்லாம் பிரும்மமே என்னும் உண்மை வெளிப்படும்; தானே தன்னைப் பெறுதலே வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படும்; தன் உடலை ஊனே என்று நினைத்து தன்னை அதனின்றும் வேறுபட்டதாக ஓர்ந்து தன் தன்மை என்ன என்று உன்னித்து நோக்கினால், சற்குருவைப் போலவே தானும் பிரும்மமே என்னும் உண்மை விளங்கும்.'' என்கிறார் இப்பாடலிலே:*

**தானே யெனநின்ற சற்குரு சந்நிதி**
**தானே யெனநின்ற தன்மை வெளிப்படில்**
**தானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற**
**ஊனே யெனநினைந் தோர்ந்துகொள் உன்னிலே** (2055)

*மீண்டும் திருமூலர், 'சீவன் தன்மைச் சிவன் என்று அறியாத வரையில் செத்துச் செத்துப் பிறப்பான்; தன்னைச் சிவன் என்று அறிந்தபோதே பிறப்பிலியாகிச் சிவனே யாவான்'' என்று ஆத்மஞானத்தால் மோக்ஷ மென்னும் அத்வைதவுண்மையை விளக்குகிறார். பின்வரும் பாடல்களிலே:*

**தன்னை யறியா துடலைமுன் தானென்றான்**
**தன்னைமுன் கண்டான் துரியர் தனைக்கண்டா**
**தானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற**
**ஊனே யெனநினைந் தோர்ந்துகொள் உன்னிலே (2055)**

*மீண்டும் திருமூலர் 'சிவன் தன்னைசிவன் என்று அறியாத வரையில் செத்துச் செத்துப் பிறப்பான்; தன்னைச் சிவன் என்று அறிந்தபோதே பிறப்பிலியாகிச் சிவனேயாவான். என்று ஆத்ம ஞானத்தால் மோக்ஷ மென்னும் அத்வைதவுண்மையை விளக்குகிறார் பின்வரும் பாடல்களிலே :*

**தன்னை யறியா துடலைமுன் தானென்றான்**
**தன்னைமுன் கண்டான் துரியர் தன்னைக் கண்டான்**
**உன்னுந் துரியமும் ஈசனோ டொன்றாக்கால்**
**பின்னையும் வந்து பிறந்திடுந் தானே (2264)**

**தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவம்**
**தானென் றவனென் றிரண்டற்ற நன்மையைத்**
**தானென் றிரண்டுன்னார் கேவலத் தானவர்**
**தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே (2848)**

**அறிவு வடிவென் றறியாத யன்னை**
**அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி**
**அறிவு வடிவென் றருளால் அறிந்தே**
**அறிவு வடிவென் றறிந்திருந் தேனே (2857)**

**அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை**
**அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை**
**அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்**
**டறைகின் றனமறை யீறுகள் தாமே (2423)**

**சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்**
**தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்**
**துவமாகிய நெறி ஸோஹம் என்போர்க்குச்**
**சிவமாம் அமலன் சிறந்தனன் தானே (2476)**

பரம் பொருளே உபாதிபேதத்தால் சிவனும் சிவனுமாகின்றது என்னும் உண்மையை, பரம் என்னும் சொல்லை இடையில் வைத்துச் சிவனை முன்னும் சீவனைப் பின்னும் வைத்து இவை மூன்றும் ஒன்றே என்கிறார்.

**இடனொரு மூன்றி லியைந்த வொருவன்**
**கடனுரு மவ்வுரு வேறெனக் காணுந்**
**திடமது போலச் சிவபர சீவர்**
**உடனுறை பேதமும் ஒன்றென லாமே** ***(2485)***

'அப்பரம்பொருளே இல்லதும் உள்ளதுமாய் இவை யாவுமாய், இவையெல்லாம் அன்று என்றும் மானியம் அன்று என்றும் சொல்லப்படுவதாய், ஒன்றே யன்றி வேறு அன்றாம் என்னும்படி உள்ளது; ஆனால் சொல்லால் விளக்கிச் சொல்ல வொண்ணாத தன்மையது என்று விரைவிலே உணர்ந்து கொண்டால் எல்லா உயிருக்கும் ஒரே உயிராக அமைந்தது.'' என்றும் சிவசீலர் மாயையை மேற்கொள்வதாலும், வசப்படுவதாலும் தோன்றுவர்; காரணகாரியம் நீங்கப் பெற்று அழிவற்ற சாந்தாதீத நிலையிலே சீவன் சிவன் விளங்கும் என்றும், இரண்டு பாடல்களால் விளக்குகிறார்.

**இல்லதும் உள்ளதும் இயாவையந் தானாகி**
**இல்லதும் உள்ளது மாய்அன்றாம் அண்ணலைச்**
**சொல்லது சொல்லிடில் துராதி தூரமென்**
**றொல்லை யுணர்ந்தால் உயிர்குயி ராகுமே** ***(2335)***

**தொழீ விச்சை ஞானங்கன் தொல்சிவ சீவர்**
**கழிவற்ற மாமாயை மாயையி னாகும்**
**பழியற்ற காரண காரியம் பாழ்விட்**
**டறிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே** ***(2334)***

முடிவுரையாக, ஞானமே முத்தி யளிக்கும் அறநெறியும் சமயமுமாம் என்று கூறியுள்ளதைக் காட்டுவது பொருந்தும்.

**ஞானத்தின் மிக்க அறநெறி காட்டிலை**
**ஞானத்தின் மிக்க சமயமும் யன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா**
**ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே** ***(1467)***